விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
[illegible]/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை (14.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

## ஈரான் - ஈராக் நில நடுக்கம் 400 பேருக்கு மேல் உயிரிழப்பு



24

யாழ். பல்கலை மாணவர்கள் ஏற்பாட்டில்

## தமிழ் அரசியல் கைதிகளுக்காக மாபெரும் கவனயீர்ப்பு பேரணி

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற கோரியும் ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவு படுத்த வலியுறுத்தியும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மாபெரும் கவனயீர்ப்பு பேரணி ஒன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக் 23

## நல்லாட்சியில் ஊழலில் ஈடுபட அச்சப்படுகின்றனர்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை கையேற்றதன் பின்னர் ஊழல்மோசடி முறைகேடுகளில் ஈடுபடுவதற்கு நாட்டில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 23

# தமிழர் மீதான சித்திரவதைக்கு ஆதாரத்துடன் படம் வெளியீடு

## அம்பலப்படுத்தியது அசோசியேட்டட் பிரஸ்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலும் தமிழர்களுக்கு எதிரான சித்திரவதைகள், பாலியல் வதைகள் தொடர்பான சாட்சியங்களை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தியுள்ளது சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸ். (23.ஆம் பக்கம் பார்க்க)



மோட்டார் சைக்கிள் விபத்து

## சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் ஐந்து நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரி வீதி யாழ்ப்பாணத்தை சேர்ந்த ராஜன் முகமது நிஜாத் (வயது 10) 23

## பியர் குடித்துக்கொண்டு கார் செலுத்துங்கள்

வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அரிசி, தேங்காய், மீன் மற்றும் மரக்கறி போன்றவற்றின் விலை குறைப்பையே மக்கள் கோரினார்கள்.

ஆனால் 2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் இந்த விடயங்கள் உள்ளடக்கப் 23

## பெற்றோல் தட்டுப்பாட்டிற்கான சூத்திரதாரியை வெளிப்படுத்துக

உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் கடந்த சில தினங்களில் பெற்றோல் பற்றாக்குறை பாரிய ஒரு பிரச்சினையாக காணப்பட்டது. இப்பிரச்சினை பாரிய ஒரு சதித்திட்டம் என்று பலர் பலவிதமாக கூறுகின்ற 02

வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம்

## நாடாளுமன்றம் தவறாக வழிநடத்தப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியினர் வாக்குவாதம்

(கொழும்பு)

நாடாளுமன்றம் தவறாக வழிநடத்தப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று குற்றம் சுமத்தினார்.

வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கேள்வியை எழுப்பும் போதே அவர் இதனை கூறினார்.

இதன்போது சபையில் இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

வரவு செலவுத்திட்டத்தை ஆய்வு செய்ய மனோ தித்தவெல்ல 23

அரசியல்வாதிகளின் உத்தரவின் பேரில்

# போர்க்குற்றங்களில் இராணுவம் ஈடுபட்டது

ஜனாதிபதி ஒப்புக்கொண்டதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் உத்தரவின் பேரில் சில படையினர் போர்க்குற்றங்களை இழைத்தனர் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புக்கொண்டார் என பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

போரில் படையினர் சிலர் போர்க் குற்றங்களை இழைத்தனர் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புக்கொண்டுள்ளார் என்று பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. அரசியல்வாதிகளின் உத்தரவின் பேரில், சில படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதாக கூறியிருந்தார்.

இந்த நிலையில் அவர், உங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப, 24

## இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல



(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டியது அத்தியாவசியமானது என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளு 14

## யாழில் வெவ்வேறு இடங்களில் வாள்வெட்டு

மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் வாள்வெட்டு குழுவின் தொடர்ச்சியான அடாவடியால் மூவர் படுகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீதியால் சென்ற இளைஞனை மறித்த இனந்தெரியாத நபர்கள், அந்த இளைஞனை கத்தியால் குத்திவிட்டு மோட்டார் சைக்கிளை பறித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு கோப்பாய் இராஜ வீதியில் இடம் 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பசிலுக்கு எதிரான வழக்கு வேறு நீதிமன்றத்துக்கு மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ திவிநெகும திணைக்களத்தின் நிதியினை மோசடி செய்ததாக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணையை வேறு நீதிமன்ற த்துக்கு மாற்றுவது குறித்த தீர்மானம் நாளை புதன் கிழமை அறிவிக்கப்படும் என கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று அறிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு எதிராக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரசார நடவடிக்கையின் போது திவிநெகும திணைக்களத்துக்கு சுமார் 2 கோடி ரூபாயை நஷ்டம் ஏற்படுத்தி பொதுச் சொத்தை மோசடி செய்ததாக தெரிவித்தே மேற்படி வழக்குத தொடரப்பட்டுள்ளது.

எதிர்த் தரப்பினர் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அரசாங்கத்தை தோற்கடிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்-மகிந்த

தேர்தலை மையப்படுத்தி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் இடம்பெற்றது. மகிந்த ராஜபக்ஷ தலைமையில், பொது ஜன பெரமுன மற்றும் கூட்டு எதிர்க்கட்சியினர் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இது தொடர்பிலான புகைப் படங்களை மகிந்த மற்றும் நாமல் ஆகியோர் தமது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளனர். இதன்போது, மகிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில், எனக்கு ரணிலுடனோ, மைத்திரிபால சிறிசேனவுடனோ தொடர்பு இல்லை, நாம் மக்களுடன் மாத்திரமே தொடர்பில் இருக் கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கும் முதலாவது வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் இதன்போது மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம)

# விலை குறைப்புக்கான விலைப்பட்டியல் நுகர்வோர் அதிகார சபையிடம் கையளிப்பு

வர்த்தமானி அறிவித்தலின்படி பல்வேறு வகையான அத்தியாவசிய உணவு பொருட்களின் இறக்குமதி வரி குறைப்புக்கான விலைகள் அடங்கிய பட்டியல் நேற்று நுகர்வோர் சபையிடம் கையளிக்கப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.

இது குறித்து கருத்து தெரிவித்த நுகர்வோர் அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரி அசித்த திலக்கரத்ன,

வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட விலைக் குறைப்புக்கான பொருட்களின் விலைகள் அடங்கிய பட்டியலை நுகர்வோர் அதிகார சபையிடம் வழங்கியுள்ளோம். இந்த விலைக் குறைப்புகளை மேற்கொள்ள நுகர்வோர் சபையின் ஒப்புதல் கட்டாயமானது.

அவர்களில் ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் இன்று முதல் வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த எட்டாம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், நிதி அமைச்சர் மங்கள சமரவீர சில வகையான அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு இறக்குமதி வரி குறைப்புக்கான தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கவுணாவத்தை வேள்விக்கான தடையை ஆட்சேபித்து நீதிமன்றில் மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் மிருகபலியிட்டு வேள்வி நடத்த தடை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்படுகிறது.

யாழ்ப்பாணம் கவுணாவத்தை ஆலயம் சார்பில் மேன்முறையீட்டு மனு மற்றும் அறிவிப்பை சட்டத்தரணி வீ.கௌதமன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாண ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலியிட்டு வேள்வி நடத்தப்படுகிறது. அதற்கான அனுமதியை இறைச்சிக்கடைச் சட்டத்தில் உள்ளூராட்சி சபைகளும் சுகாதாரத் திணைக்களமும் வழங்குகின்றன. அவ்வாறு அனுமதி வழங்கப்படுவது தடை செய்யப்பட வேண்டும் எனக் கோரி சைவ மகா சபையினர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை சட்டத்தரணி வி.மணிவண்ணன் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். அன்றிலிருந்து வேள்விக்கு இடைக்காலத் தடைவிதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஒன்றரை வருடங்கள் விசாரணையிலிருந்த இந்த வழக்குக்கு கடந்த ஒக்டோபர் இறுதிக் கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழங்கினார்.

இந்துக் கோவில்களில் வேள்வி பூசைகளின் போதும், ஏனைய எந்த பூசைகளின் போதும் மிருகங்கள் பலியிடப்படுவதற்கு முற்றாக தடை விதிக்கப்படுகிறது.

இந்தத் தடை உத்தரவை மீறி எவரேனும் மிருக பலியிடலை மேற்கொண்டால் அது தொடர்பாக ஒரு பொதுமகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாலும் அதன் மீது உடனடியாக விசாரணை செய்து குற்றமிழைத்தவரை கைதுசெய்து அருகிலுள்ள நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்படுகிறது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

இந்தத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்தும் வேள்வியின் பண்பாட்டுத் தேவையை வலியுறுத்தியும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்படுகிறது. (ம)


சாமியே சரணம் ஐயப்பா

ஈழத்து சபரிமலை



சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில்

வருடாந்த மகரசங்கிராந்தி மகர விளக்கு மண்டல விரத மஹோற்சவ பெருவிழா

17.11.2017 தொடக்கம் 14.01.2018

பொங்கல் தைத்திருநாள் வரை

- 17.11.2017 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் புனித விரத மாலை அணிதல்
- தேவஸ்தான குருசாமி கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார் அவர்களுடன் குருசாமி க.தம்பிராசா சுவாமிகள் இணைந்து அவர் தம் திருக்கரங்களினால் சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு நடைபெறும்.
- தேவஸ்தான சுவாமிமார்களுக்கு தேவஸ்தான குருசுவாமியுடன் இணைந்து கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார் மாலை அணிவித்தல்
- தொடர்ந்து சிறப்பு பூஜைகள் வழிபாடுகள் நடைபெறும்



இங்ஙனம்: ஈழத்து சபரிமலை ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில்

அனைவரும் வருக. ஐயன் அருள் பெறுக!




## பெற்றோல் தட்டுப்...

னர் இந்த விடயத்துடன் தொடர்புடையவர்களை நாட்டிற்கு தெரியப்படுத்துவது அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் கடமை என்று பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் பெற்றோல் பற்றாக்குறை பெரும் ஒரு பிரச்சினையாக காணப்பட்டது. இது ஒரு சதித்திட்டம் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனுடன் தொடர்புபட்டவர்களை உடனடியாக மக்களுக்கு அறிவிப்பதாக தெரிவித்தார். ஆனால் அவர் யாரென்று குறிப்பிடவில்லை.

இதுவரை 6 அமைச்சர்கள் இப்பதவியில இருந்துள்ளனர். இவர்களில் இருவர் இவ் விடயத்துடன் தொடர்புபட்டதாகவும் அவர்களை தான் வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டமை ஏற்கக்கூடிய விடயம் ஆனால் மிகுதியாக உள்ள நால்வரது நிலைமை கவனிக்கத்தக்கது. இவர்களையும் இவ்விடயத்துடன் தொடர்புபடுத்துவது முறையற்ற விடயம்.

டீசல் மற்றும் பெற்றோல் மாபியாக்களை பிடித்து தண்டனை பெற்றுத்தருவதாக அரசாங்கம் ஆட்சிக்கு வரும் பொழுது வாக்குறுதி அளித்தது. ஆனால் நடைமுறையில் அந்த வாக்குறுதியும் பொய்யானதாகவே உள்ளது. இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணாவிடின் எதிர் காலத்தில் நாட்டில் பெற்றோலை மையப்படுத்தி பல பிரச்சினைகள் தோன்றும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

## யாழில் வெவ்வேறு...

பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் மத்தியை சேர்ந்த சிறிகாந்தன் என்ற இளைஞனே படுகாயம் அடைந்தவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, படுகாயம் அடைந்த இளைஞன் நேற்று இரவு 7.30 மணியளவில் கோப்பாய் இராஜ வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். அவரை மறித்த இருவர் கோப்பாய் சந்திக்கு எந்த வழியால் செல்வது என விசாரித்தனர். அப்போது அவர்கள் மேல் சந்தேகம் கொண்ட குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளை திருப்பி செல்ல முற்பட்டுள்ளார். அப்போது அவரை மறித்த அந்த நபர்கள் கத்தியால் வயிற்றில் குத்திவிட்டு மோட்டார் சைக்கிளை பறித்து சென்றுள்ளனர்.

வீதியில் சென்றவர்கள் காயமடைந்த இளைஞரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று இரவு 8.30 மணியளவில் மானிப்பாயில் நவாலி கலையரசி வீதியில் உள்ள வீட்டில் நுழைந்த 10 நபர்கள் வீட்டை அடித்து சேதப்படுத்தியதுடன், வீட்டில் இருந்த கந்தையா தட்சணாமூர்த்தி (வயது 53) என்பவரை வாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டு சென்றுள்ளனர். குறித்த நபரும் யாழ்போதனா வைத்தியசாலையில். அனுமதிக்கப்பட்டுள்ளார்

இதே வேளை யாழ்.இந்துக்கல்லூரி பகுதியில் உள்ள வீதியால் சென்ற தனியார் நிறுவனம் ஒன்றின் விற்பனை பிரதிநிதி ஒருவரை வழிமறித்த சிலர் அவருடைய பையை பறித்து அவரை கண்மூடித்தனமாக தாக்கி விட்டு சென்றுள்ளனர். குறித்த நபர் யாழ்.பொலிஸில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் இனந்தெரியாதோரின் கண்மூடித்தனமான வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொழும்புத்துறை ஈச்சமோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த அருளானந்தம் சஜீவன் (வயது 35) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளானவராவார். வாள்வெட்டை நடத்தியவர்கள் மூன்று பேர் என்று தெரியவருகின்றது. மேலதிக விசாரணையை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9,30)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முகாமையாளர் இ.ஜெயபாலன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**இராஜதுரை நாகம்மா**

அவர்கள் 13.11.2017 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

க.கு.கந்தையாபிள்ளை அன் சன்ஸ் நிறுவனத்தினரும், ஊழியர்களும்

# கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்

## சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)


தற்போது மழைகாலம் என்பதால் நிலத்தடி நீரை நேரடியாக குடிநீராகப் பயன்படுத்துவோர் குறித்த நீரினை சுட வைத்து பருகுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் பாடசாலை மாணவர்களும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். தற்போது மழை அனைத்து இடங்களிலும் பெய்து வரும் நிலையில்,

தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இது தவிர கிணறுகளும் நிரம்பி வழிகின்றன. இவ்வாறான நிலையில் வெள்ள நீர் கிணறுகளுக்குள் செல்லும் நிலையும், அதிகரித்த வெள்ளத்தால் குப்பை கூழங்கள் அடித்து செல்லப்பட்டு நிலத்தடி நீரிலும் கலந்துவிட வாய்ப்புள்ளன.

சாதாரணமாகவே குடிநீரை நன்கு கொதிக்க வைத்து பருக வேண்டும். எனினும் தற்போது விசேடமாக மழைக்காலம் என்பதால் குடிநீரில் பக்றீரியாக்களின் தாக்கம் அதிகரித்து காணப்படலாம். அல்லது குடிநீரில் நீரில் அசுத்த நீர் கலந்து காணப்படலாம். இவற்றை பருகுவதன் மூலம் வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆகவே கிணறு, ஆறு, அருவிகள், குளங்கள் ஆகியவை உட்பட நிலத்தடியில் இருந்து பெறப்படும் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து பருகுவதன் மூலம் இந்த நோய்கள் வருவதற்கான வாய்ப்புக்களை குறைத்துக்கொள்ள முடியும். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் உள்ள கிணறுகளில் நீர் அருந்தாமல், வீடுகளில் இருந்து கொதித்தாறிய நீரினை எடுத்து சென்று பருகுவது பாதுகாப்பானதாகும். கடந்த வருடம் பாடசாலை மாணவர்களே இவ்வாறான நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் மாணவர்களுடைய பெற்றோர்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். போதனா வைத்திய சாலையில் மழைக்கால நோய் பீடிக்கப்பட்ட நிலையில், குறிப்பிடத்தக்கவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் மழை காலத்தின் முடிவிலேயே இந்த நோயின் தாக்கத்தின் தீவிரத்தை உணர முடியும் என யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே அனைவரும் குடிநீர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)



(கேலிச்சித்திரம்)

# இலங்கை இராணுவம் சரணடைந்தவர்களை துன்புறுத்தவில்லை!

## தளபதி மகேஷ் விளக்கம்




(கொழும்பு)

**இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்களையும் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டவர்களையும் துன்புறுத்த வில்லையென இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடக மொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியொன்றிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்களையும், கைது செய்யப்பட்டவர்களையும் துன்புறுத்த வேண்டிய அவசியம் இராணுவத்திற்கு ஒருபோதும் இருக்கவில்லை என விளக்கமளித்துள்ளார். (இ-7)

# இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க புதிய கல்வித்திட்டம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய புதிய கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் எக்காரணம் கொண்டும் சீனாவுக்கு வழங்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மாத்தறை ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு தெரிவித்தார். இதற்காக இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அடுத்த வருடம் புதிய கல்வி நவோதய திட்டத்திற்கென 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடளாவிய ரீதியில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எந்தவொரு சவாலையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் தயாராகவுள்ளது.

குடும்ப ஆட்சி மூலம் கடந்த அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட பாரிய கடன் சுமையை குறைப்பதற்கு சமகால நல்லாட்சி அரசாங்கம் கிரமமான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்திற்கு நிகரான தொகையை விடுதலைப் புலிகளும் செலவிட்டுள்ளனர்



(கொழும்பு)

கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தால் இலங்கைக்கு 400 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தகவல் வெளியிட்டுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்திற்கு அரசாங்கம் 400 பில்லியன் அமெரிக்க டொலரை செலவிட்டுள்ளது.

எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பும் அதற்கு நிகரான தொகையை செலவிட்டுள்ளதாக குறித்த சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் ஏற்பட்ட நட்டத்தை இலங்கை இதுவரை கணக்கிடவில்லை. ஆனால் இந்த நட்டம் குறித்து சிந்தித்து பார்த்து மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (இ-7)

# மரத்தில் அமர்ந்த மைத்திரி மக்களுடன் கலந்துரையாடல்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறிது நேரம் காலி முகத்திடல் மைதானத்தில் மரமொன்றில் ஓய்வாக அமர்ந்து, மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஜனாதிபதி பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், மக்களின் பாராட்டினையும் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த எளிமை போக்கு மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே கொழும்பு காலி முகத்திடலில் நேற்று முன்தினம் தேசிய நீரிழிவு தின நடைப் பயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேசத்தின் மத்தியிலும், இலங்கை மக்களுக்கு மத்தியிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எளிமையான ஒருவர் என்ற கருத்து காணப்படுகின்ற நிலையில் மக்கள் மத்தியில் அவர் சிறப்பான ஒரு இடத்தையும் பெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் 2ஆம் திகதி கட்டாருக்கு இரண்டு நாள் அரச முறை பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ஒரு கட்டடத்திற்கு வெளியில் அமர்ந்து சாதாரணமாக பேசிக்கொண்டிருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## தயானந்தன் சுரேஸ்குமார்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தயானந்தன் சுரேஸ்குமார் அவர்கள் நேற்று (13.11.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தயானந்தன் - சரஸ்வதி தம்பதியரின் செல்வப் புதல்வனும் பிரமிளாவின் அன்புக் கணவரும் றிஜித்தின் பாசமிகு தந்தையும் கதிர்காமத்தம்பி - பவானி ஆகியோரின் மருமகனும் சுதா, யசோ, யானு, தீபன் (இ.போ.ச ஊழியர் - காரைநகர் சாலை) ஆகியோரின் சகோதரரும் விஜயன், ஜீவன், றூபன், துஷ்யந்தன், தீபா, சுவேதா ஆகியோரின் மைத்துனரும் விது, சஜி, மது, சாரு, சித்து, தானியா, டேனு ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோட்டைக்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(1327)
தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜதுரை நாகம்மா



அராலி தெற்கு, அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜதுரை நாகம்மா நேற்று (13.11.2017) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாலன், குணபாலன் (ஆலய சிற்பாசாரி), காலஞ்சென்ற சரஸ்வதி, ஜெயபாலன் (முகாமையாளர் - க.கு.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்) ஆகியோரின் தாயாரும் சரோஜினிதேவி, தயாநிதி ஆகியோரின் மாமியாரும் கஜபாலன், நிரூபன், தர்சனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(C-375)
தகவல்: இ. குணபாலன் - 077 911 6216
இ. ஜெயபாலன் - 077 138 1436

## இலக்கு '7'... இப்போ '4'
## மீண்டும் தந்தையானார் ரொனால்டோ



கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோவிற்கு நேற்று முன்தினம் 4ஆவது குழந்தையாக பெண் குழந்தை பிறந்துள்ளது.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ (வயது-32). ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த தலைமுறையின் சிறந்த வீரரான இவருக்கு ஏற்கெனவே கிறிஸ்டியானோ ஜூனியர் என்ற மகன் உள்ளான். இவர் 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தான். கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கட்டுப்பாட்டில் வளர்ந்து வரும் ஜூனியரின் தாயார் குறித்து ரொனால்டோ எந்த தகவலும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த வாடகைத் தாய் மூலம் ரொனால்டோவுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தது. இந்த இரண்டு குழந்தைகளும் பெண் குழந்தைகள்.

இந்நிலையில் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் காதலி ஜார்ஜினா ரோட்ரிக்ஸ் கர்ப்பமாக இருந்தார். கர்ப்பிணியான அவருக்கு நேற்று கிறிஸ்டியானோவின் சொந்த ஊர் அருகில் உள்ள குய்ரோன் யுனிவர்சல் மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தைக்கு அலானா மார்ட்டினா என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தற்போது கிறிஸ்டியானோ ரொனால்டோவிற்கு நான்கு குழந்தைகள் உள்ளன. 7 குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன் என்று ரொனால்டோ ஏற்கெனவே கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



# விலைக் கேள்வி கோரல்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG-SD - II) - 2017
### உள்ளூராட்சித் திணைக்களம், வட மாகாணம்.

1. தவிசாளர், திணைக்களபெறுகைக்குழுசார்பில் உள்ளூராட்சித் திணைக்களம் வட மாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கு இப்போது தகவுடையோரும், தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது. ஆயினும் 30.09.2016ம் திகதிய 04/2016(I) ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின்படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி புனரமைப்புக்கு பொருத்தமான கீழேஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புபட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தேவையானதகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்விஆவணத்தில் பகுதி V **(Schedule / Bidding Data & Contract Data)** இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் உள்ளூராட்சித் திணைக்களம், வட மாகாணம், முதியோர் வளாகம், யாழ் - கண்டிவீதி, கைதடி (தொலைபேசி இலக்கம்:021 221 3728, 021 730 0343, தொலைநகல்: 021 221 5738, மின்னஞ்சல் **nplocalplan@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம், முதியோர் வளாகம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து 14.11.2017ஆம் திகதியிலிருந்து 28.11.2017ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பிற்பகல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா3500.00 பணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் இருப்பிரதிகளில் (மூலம், பிரதி) 29.11.2017ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், திணைக்களபெறுகைக்குழு, உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம், முதியோர் இல்ல வளாகம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் இவ்வேலைக்குரிய கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், மூடியவுடனேயே மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.11.2017ஆம் திகதி அன்று பி.ப 14.30 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வியானது சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (எழுபத்தேழு14.02.2018) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்வியை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
11. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | பெறுகைக்குழு | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| NP/14/08/JF/PSDG(SD-II)/JF/MC/2017/17 | கந்தப்பசேகரம்வீதி புனரமைப்பு (காப்பெற் வடிகாலு அமைப்பு) யாழ் மாநகர சபை | திணைக்கள பெறுகைக் குழு | 11.1 | 30 நாட்கள் | C6 &C5 | 111,000.00 | 14.03.2017 வரை |

தவிசாளர்,
திணைக்களப்பெறுகைக்குழு
உள்ளூராட்சித் திணைக்களம்,
வடமாகாணம்.
13.11.2017

(C-370)

# நாட்டைவிட்டு புறப்படவுள்ள சீனக் கடற்படைக் கப்பல்



(கொழும்பு)

சீன மக்கள் விடுதலை இராணுவ - கடற்படை கப்பல் "குய் ஜி குவாங்" இலங்கைக்கான ஐந்து நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையை வந்தடைந்த இந்தக் கப்பல் இன்று நாட்டைவிட்டு புறப்பட்டுச்செல்லவுள்ளது. (இ-7)

# பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு சிறுப்பிட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம் நாளை புதன்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.40 மணியிலிருந்து முற்பகல் 11.23 மணிவரையுள்ள சுபநேரத்தில் பாலஸ்தாபனம் இடம்பெறும். (இ-10)


# ஏலவிற்பனை

ஆசிரிய வளநிலையம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கீழ்வரும் பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

நேரம் :மு.ப. 10.00 மணி

காலம் 2017.11.29

Assembly hall chairs 24, Audio Cassette Recorder(B)-01, Audio Cassettes Recorder(s)-02, Digital Printer-01

முகாமையாளர்.
ஆசிரியவள நிலையம், யாழ்ப்பாணம். (1319)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1935 - 10 - 14 | 2017 - 10 - 15 |



அமரர்

## செல்லத்துரை செல்வநாயகம்

பாசத்தின் பிறப்பிடமாய் அடக்கத்தின் ஊற்றாய்
அமைதியின் பிறப்பிடமாய் வேர்படர்ந்த விருட்சமாய்
சொந்தங்கள் புடைசூழ பரவசமாய் வாழ்ந்தவரே
அவனியிலே எமை தவிக்கவிட்டு நெடுந்தூரம் சென்றீரே
நெஞ்சில் வலியுடனும் நீங்காத நினைவுடனும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்

கடந்த 15.10.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 60, மணஸ்தறை வீதி,
கந்தர்மடம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(574)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் கனகரத்தினம்

[யாழ்.குருநாதர் வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்(ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி)]



பருத்தித்துறை வீதி 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் **மாணிக்கம் கனகரத்தினம்** அவர்கள் 11.11.2017 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- நாகம்மாவின் அன்பு மகனும் மாணிக்கம்-முத்து அவர்களின் பாசமிகு மருமகனும் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூவிலிங்கம், செல்வராசா, மகாலட்சுமி, நவமணி (பம்பா), கனகசுந்தரம் (ACDC), காலஞ்சென்ற சுந்தரலிங்கம், குமரேசன், பாலச்சந்திரன், காலஞ்சென்ற சண்முகராசா, வவா, றோசா, மல்லி, பவானி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கஜேந்திரன் (நோர்வே), றஜேந்திரன் (நோர்வே), கஜேந்தினி (யாழ்.மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா (நோர்வே), நிஷா (நோர்வே), முருகநாகராஜா (லக்ஸ்சி பஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றிச்சாட், கெவின், லியானா, ஹரிஷாத், லக்சனா, றம்மியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ராணி, கமலா (ஜேர்மனி), பரமேஸ்வரி, தேவன் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 15.11.2017 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(1323)

# இராசி பலன்

14.11.2017
(ஐப்பசி 28, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 3.18 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.33 மணிவரை
சுபநேரம் 10.37- 12.07 மணிவரை
இராகுகாலம் 3.07- 4.37 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் -சதயம் | | ராகு |
| கேது | | | |
| | சனி புத | சூரி சுக் குரு | செவ் சந் |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** தொழிலில் நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**கும்பம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், பண விரயங்கள் கூடும்.

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.



வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் வீணாகான குருபீடத்தினால் நியூ மைதிலி ஜூவலரி ஆதரவில் ஆன்மீக- அறநெறி எழுச்சிக்காக யாழ்.மாவட்ட முன்பள்ளிக் குழந்தைகளுக்கு மாபெரும் விளையாட்டுப் போட்டி விழா வீணாகான குருபீடத்தின் தலைவர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அமரர் விமலேந்திரன் கவிதனின் முதலாம் ஆண்டு நினைவாக இரத்த தான முகாம் சித்தன் கேணி இளைஞர் முன்னேற்ற கழக மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறும். (இ-17)

➢➢➢➢➢➢➢

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமானது எதிர்வரும் 05.12.2017 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இல.05, பழையபூங்கா வீதி,கன்டிக் குளியிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவன அலுவலகத்தில் இரத்த தான முகாமினை ஏற்பாடு செய்துள்ளது. (இ

## புலமைப்பரிசில் பெறுபேறு

யாழ்.கோண்டாவில்
சி.சி. த.க. பாடசாலை
வி.திசாந்-160.

# கடற்கரையை சுத்தப்படுத்திய இராணுவத்தினர்; கழிவுகளை உடன் அகற்றுமாறு கோரும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைஎல்லைக்குட்பட்ட குருநகர் றெக்ளமேசன் கடற்கரையோரங்கள் கடந்த புதன்கிழமை இராணுவத்தினரால் தூர்வாரப்பட்டது.

இருப்பினும் கழிவுகள் உரியவாறு அகற்றப்படாமல் வீதியோரங்களில் தேங்கியிருப்பதால் துர்நாற்றம் வீசி சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு தேங்கிக் கிடக்கும் கழிவுகளை விரைவில் அகற்ற நடவடிக்கையெடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10-100)




## மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய கோப்பாய் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தி.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் டாக்டர் வை.தியாகராஜா, யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள முறைசாராக் கல்வி மற்றும் விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், யாழ். வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்) து.துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10)

# யாழ்.வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியையும் நாவலர் வீதியையும் இணைக்கும் யாழ் வீதி நீண்ட காலமாக புனரமைப்பின்றி காணப்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்.நகரின் மையப் பகுதியில் இருக்கும் யாழ்.வீதி புனரமைப்பின்றிக் காணப்படுவதுடன் குப்பை கூழங்களினாலும் விலங்குகளின் கழிவுகளினாலும் சுகாதாரச் சீர்கேட்டுடன், வெள்ள நீர் தேங்கியுள்ளதால் அவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (இ-7)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்திற்கு ரூபா முப்பதாயிரத்திற்கு கொடிக்கம்பங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றை நேற்று விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண விளையாட்டுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் ஆனந்தகுமார் மற்றும் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினால் நாளை புதன்கிழமை கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்ட செயலகம் முன்பாக " அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்குதல் வேண்டும் " எனக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் பட்டதாரிகள் தெரிவிக்கையில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான 143 நாள் போராட்டத்தில் " பட்டதாரிகளை பயிற்சி அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளராக இவ்வருடத்திற்குள் நியமிப்பதாக குறிப்பிடப்பட்டது" அதன்பொருட்டு எமது போராட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் இதுவரை எவ்விதமான நியமனங்களையும் வழங்குவதற்கான செயற்பாடும் நடைபெறவில்லை இதனால் இப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இப் போராட்டத்தின் போது முதலமைச்சர், ஆளுநர், அரசாங்க அதிபர் ஆகியோரூடாக பிரதமருக்கு பட்டதாரி ஏின்கையெழுத்துக்கள் உள்ளடங்கிய மகஜர் கையளிக்கப்படவுள்ளது. அரச வேலை வாய்பை வழங்கக் கோரிய கவனயீர்ப்பு ஆர்ப்பட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் பல தடைவை முன்னெடுக்கப்பட்டு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. அது தொடர்பில் இதுவரை சாதகமான பதில் எதுவும்கிடைக்கபடபெறவில்லை.

இந்நிலையில் இறுதியாக யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொடர்ச்சியாக இரவு பகலாக இரண்டு நாட்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் 100 நாட்களுக்கு மேலாக தொடர் போராட்டம் என்பன வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளால் முன்னெடுக்கப்பட்டது. எனினும் முடிவுகள் இன்றி போராட்டம் கைவிடப்பட்டது. இந்நிலைமையில் பட்டதாரிகளாகிய நாம் 2012 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை எந்தவொரு வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைமைகளிலேயே இருந்து வருகின்றோம் என்பதனை மீண்டும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-4)

# ராஜித அபுதாபி பயணம்



(கொழும்பு)

பூகோள சுகாதார மாநாடு நாளை நாளை அபுதாபியில் இடம்பெறவுள்ளது. இதில் இலங்கையை பிரதிநிதிப்படுத்தும் பொருட்டு, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் மருத்துவ அதிகாரிகள் குழுவொன்று செல்ல இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த பூகோள சுகாதார மாநாட்டை அபுதாபி இளவரசர் செயிட் மொஹமட் பின் பில்கேட்ஸ் நிதியம் மற்றும் காட்டர்மத்திய நிலையம் ஆகியன ஒன்றிணைந்து நடத்துகின்றன.

இந்த மாநாடு, தொற்று நோயை தடுக்கும் வகையில் அனைவரும் ஒன்றிணைதல் என்ற தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# வடக்கில் கடும் மழைக்கு வாய்ப்பு

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



(கொழும்பு)

தென்மேற்கு வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள வளிமண்டலக் குழப்பத்தினால், வடக்குப் பகுதியில் மிகக் கடுமையான மழையும் கடும் காற்றும் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வடக்கு, வடமேல், மேல், தென் மாகாணங்களின் கரையோரப்பகுதிகளில் கடும் காற்று வீசும்.

வடக்கு மாகாணத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கடந்த சில நாட்களில் 500 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதால், அனைத்து அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பொலிஸார், படையினர் முழுமையான தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண கடல்நீரேரியின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. மழை தொடர்ந்து பெய்யுமானால், அடுத்த சில நாட்களில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் சாத்தியம் உள்ளது.

சடுதியான வானிலை மாற்றங்கள் ஏதும் நிகழலாம் என்பதால், அனர்த்த முகாமைத்துவ நிலையம் வவுனியாவில் சிறப்பு அலகு ஒன்றை உருவாக்கி, தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கடந்த சில நாட்களில் பெய்த மழையினால் யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொம்மைவெளி உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நாவற்குழி - யாழ்ப்பாணம் வீதி, அச்சுவேலி- தொண்டைமானாறு வீதி, அராலி - யாழ்ப்பாணம் வீதி என்பனவற்றை மேவி வெள்ளம் பாய்கிறது.

தொண்டைமானாறு கடல் நீரேரியின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதையடுத்து, உவர் நீரேரி தடுப்பணையின் கதவுகள் திறந்து விடப்பட்டு, நீர் கடலுக்குள் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதுபோல, வழுக்கையாற்று பகுதியில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் அராலி தடுப்பணையின் கதவுகளும், நாவற்குழி பகுதியில் உள்ள தடுப்பணையின் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. (இ-7)


அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்தும் நெஞ்சங்கள்




கௌரவ டக்ளஸ் தேவானந்தா

தமிழ் மக்கள் நன்மை பெற
விடிவெள்ளியாய் நீர் உதித்து
சாதனைகள் பல புரிந்து
சந்தோசமாய் வாழ
எழில் பொங்கும் வாழ்வொன்றை
உருவாக்க வேண்டும் என்ற
எண்ணத்தின் செயல் வடிவம்
எங்கள் பாசமிகு
ஐயா தேவானந்தா...
உமது உழைப்பை உணர்ந்த மக்கள்
உமது பக்கம் திரும்புகிறார்கள்.
தர்மத்தின் தலைவனாக

தமிழ் மக்கள் உமை வாழ்த்த
இளைஞர்கள் வேலைவாய்ப்பு
இடமாற்றம், உயர்பதவி
உழைப்பாளர் ஊதியம்
உயர்வதற்கு வழியமைத்து
அபிவிருத்தி திட்டங்கள்
அனைத்துமே செய்து தந்து
அரசியல் பணி புரிந்து
அறுபது அகவை காணும்
உயர்திரு டக்ளஸ் தேவானந்த
நீண்ட காலம் வாழ அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

[575]

வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம்



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:49<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் :QS லண்டன் NOTPR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7961 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 45<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் : Civil Eng/ பொறியியலாளர்<br>தொ.இ: G/7282 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7962 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 22<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7284 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 39சூரி செவ் 1இல்.<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: B/7964 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDE/ஆசிரியர்<br>தொ.இ: G/7287 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 27<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7965 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 46 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் MBA/தனியார் தொழில்<br>தொ.இ: G/7288 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 42 ஆயிரத்து 926 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 42 ஆயிரத்து 926 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 924 பேர் மீள்குடியேறியுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மக்கள் மீள்குடியேறியிருக்கின்றனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3ஆயிரத்து 902 குடும்பங்களும் மாந்தை கிழக்கில் 3ஆயிரத்து 3 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரத்து 75 குடும்பங்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 451 குடும்பங்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 159 குடும்பங்களும் வெலிஓயா பிரதேசத்தில் 3ஆயிரத்து 336 குடும்பங்களுமாக மொத்தம் 42 ஆயிரத்து 926 குடும்பங்கள் மீள்குடியேறியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (2-315)

# வட்டுவாகல் முகத்துவாரம் கடலுடன் வெட்டி இணைப்பு



(மல்லாவி )

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை அண்மித்த பகுதி நந்திக்கடல் நீரேரியில் அண்மையில் பெய்த மழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து வட்டுவாகல் பாலத்தினை மேவிப் பாயும் சூழ்நிலை ஏற்பட்டதையடுத்து வட்டுவாகல் நந்திக் கடலையும், முல்லைத்தீவு பெருங்கடலையும் இணைக்கும் சாலை மணல்மேடு கனரக இயந்திரத்தின் மூலம் வெட்டித் திறக்கப்பட்டு நந்திக்கடல் நீர் பெருங் கடலுக்குள் விடப்படுகின்றது.

இந்த சம்பவம், நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8. 30 மணியளவில்நடைபெற்றுள்ளது.

இவ்வாறு மணல்மேடு வெட்டி கடலுக்குள் நீர் பாய்ச்சப்படாது விடின் முல்லைத்தீவு - பரந்தன் வீதி ஊடான போக்குவரத்து துண்டிக்கும் அபாய நிலை ஏற்படுவதுடன், பழைமையான வட்டுவாகல் பாலத்திற்கும் பாரிய சேதம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டே மணல் மேடு வெட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வயல் நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. இதனை கருத்தில் கொண்டு நந்திக்கடல் கடலுடன் சங்கமிக்கும் பகுதியான வட்டுவாகல் முகத்துவார பகுதி கடலுடன் வெட்டி இணைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருடன் நேற்று முன்தினம் இந்த முகத்துவார பகுதியை கடலுடன் வெட்டி இணைப்பது தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது. இதற்கு அமைவாகவே குறித்த முகத்துவாரப் பகுதி கட லுடன் வெட்டி இணைக்கப்பட்டுள்ளது. (2-281-15)

வன்னி வலம்

# தமிழரசுக்கட்சியின் ஜனநாயகம் உச்சமானது - சிறிதரன் எம்.பி

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உச்சக்கட்ட ஜனநாயகம் உள்ள கட்சியாக தமிழரசுக்கட்சி காணப்படுகின்றது என் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், இன்றைய கூட்டத்தில் அரசியல் யாப்பு தொடர்பான விடயங்கள் பரிமாறப்பட்டிருந்தது. இடைக்கால அறிக்கையே தற்போது வெளிவந்துளளது. இதன் பிரகாரம் வர இருக்கின்ற இறுதி வரைபில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஆகவே இடைக்கால வரைபை வைத்து மக்களை குழப்பாமல் அரசியல் யாப்பிற்கான முழுமையான வடிவம் வந்ததன் பின்னரே தான் மக்களுக்கு உண்மை விடயங்களை சொல்ல முடியும் என்பது தொடர்பாக கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது. தமிழரசுக்கட்சி அதனோடு இணைந்திருக்கக் கூடிய பங்காளி கட்சிகள் இணைந்து போட்டியிடுவது தொடர்பான ஆலோசனைகளையும் மத்தியகுழு உறுப்பினர்கள் முன் வைத்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலும் வடக்கில் மல்லின மக்கள் வாழக் கூடிய இடங்களில் உள்ளூ



ராட்சி மன்றத் தேர்தலில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் தொடர்பாகவும் கூட்டாக எவ்வாறு இந்த தேர்தலில் மாற்றத்தினை கொண்டு வருவது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதேவேளை கூட்டமைப்புக்குள் ஒற்றுமை நிலைக்குமா என கேட்டபோது, தமிழரசுக்கட்சி ஒற்றுமைக்காகவே கூடுதலான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது. நாங்கள் ஒற்றுமையை விரும்புவதனால்தான் எங்கள் கட்சி தொடர்பாக பலர் விமர்சனத்தினை முன்வைக்கின்ற போதிலும் எங்களுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைக்கும் போதும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக நாம் கூடியளவு மௌனத்தினை வழங்கி ஒற்றுமைக்காக தியாகம் செய்துகொண்டிருக்கின்றோம்

அந்த தியாகம் வீண் போகாது. ஜனநாயக தமிழரசுக் கட்சி உருவாகியுள்ளது தொடர்பாக கேட்டபோது, இலங்கையில் எல்லோருக்கும் ஜனநாயக உரிமை இருப்பதுடன் தமிழ்த்தேசிய க்கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் ஜனநாயகம் உச்சமானது. ஆகவே அதில் உள்ள உச்சமான ஜனநாயகத்தைப் பயன்படுத்தி பல பேர் இவ்வாறு கட்சிகளை தொடங்கனம். தேர்தலில் கேட்கலாம் மக்கள் விடையளிப்பார்கள். (2-250)

# பயணப்பையினுள் மறைத்து வைக்கப்பட்ட 2 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது



(மல்லாவி)


புளியங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ-9, வீதி ஊடாகயாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு பயணித்த பேருந்தை தடுத்து நிறுத்தி பொலிஸார் சோதனையிட்ட போது விடு முறையில் வீடு சென்ற இரா ணுவ வீரர் ஒருவரின் பயணப்பையி னுள் உடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட் டிருந்த 2 கிலோ நிறையு டைய கேரளக்கஞ்சாவை கைப்பற்றியுள்ளதுடன், சந் தேகத்தின்பேரில் அதனைக் கொண்டு சென்ற இராணுவ வீரரையும் கைது செய்துள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுப்புல் விதானகே தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.45 மணி யளவில் நடைபெற்றுள்ளது.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில், கடந்த 11 ஆம் திகதி சனிக் கிழமை இரவு நேர ஊர் சுற்றுக்காவல் கடமை யில் ஈடுபட்டிருந்த பொலி ஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது. அதில் பயணித்த விடுமு றையில் வீடு சென்ற இரா ணுவ வீரர் ஒருவரின் பய ணப் பையினுள் உடைக ளுக்குள் மறைத்து வைக் கப்பட்டிருந்த கேரளக்கஞ் சாவுடன் சந்தேக நபரான இராணுவ வீரரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள தடயப் பொருட்கள் புளியங்குளம்பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன்கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற் டுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தாக புளியங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுப்புல் விதானகே தெரிவித்துள்ளார். (2-15)

# மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்



(குருமன்காடு)

வவுனியாவைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற் குட்பட்ட 24 பாடசாலை மாணவர்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணசபையின் 2017ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியின் கீழ் நான்கு இலட்சத்துஎட்டாயிரம் ரூபாய் நிதியில் 24 துவிச்சக்கரவண்டிகள் கடந்த 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இலங்கை தமிழ ரசுக் கட்சியின் மாவட்ட காரியலாயத்தில் ப.சத்தியலிங்கத்தின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட பாடசாலை களிலிருந்து 14 மாணவர்களும், வவுனியா தெற்கு வலயத்திலிருந்து 10 மாண வர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுபாசினி சிவதர்சன், வவுனியா வடக்கு வலய அபிவிருத்தி சுகர் சி.மகேஸ்வரன், தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 99 வேலைகள் நிறைவு

## முல்லை. மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல் படி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 138 வேலைகளுக்கு 68 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதில் 99 வேலைகள் நிறைவடைந்துள்ளதாகவும் மாவட்டச் செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு நிதியொதுக்கீட்டின் கீழ் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதில் கிராமஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 47 வேலைத்திட்டங்கள் 23 மில்லியன் ரூபா செலவிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் 19 வேலைத்திட்டங்கள்9.5 மில்லியன்ரூபா செலவிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 24 வேலைத்திட்டங்கள் 13.5 மில்லியன் ரூபா செலவிலும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் 24 வேலைத்திட்டங்கள்10 மில்லியன்ரூபா செலவிலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் 15 வேலைத்திட்டங்கள் 7.5 மில்லியன் ரூபாவிலும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவின் கீழ் 9 வேலைத்திட்டங்கள் 4.5 மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி 138 வேலைத்திட்டங்களில் 99 வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

ஏனைய வேலைகள் நடைபெற்று வருவதாகவும் மாவட்டச்செயலகப்புள்ளிவிபர தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-35)

# மறவன்குளத்தில் 1.51 மில்லியன் பெறுமதியான வாழ்வாதாரத் திட்டம்

(குருமன்காடு)

சமுர்த்தி திணைக்களத்தின் நிதியுதவியுடன் மக்களின் பங்களிப்பில் ஆரம்பிக்கப்பட்ட 1.51 மில்லியன் பெறுமதியான வாழ்வாதார திட்டத்தை கடந்த 10ஆம் திகதி வவுனியா மாவட்ட சமுர்த்தி திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சன் மக்களுக்கு கையளித்தார்.

வலுப்படுத்தும் குடும்பங்களுக்கான வாழ்வாதார வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா சமளங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மறவன்குளம் கிராமத்தை சேர்ந்த 9 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உத்தியோகத்தர் ம.ரமேஸால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த வேலைத் திட்டத்தில் உணவகம் ஒன்று, அரைக்கும் ஆலை ஒன்று, புகைப்பட பிரதி கடை ஒன்று, துவிசக்கரவண்டி திருத்தும் கடை இரண்டு, மூன்று பேருக்கு பால்மாடுகள், வீட்டுத் திட்டம் ஒன்று என்பன அடங்குகின்றன. (2-250)

## வியாபார நிலையங்களை 30 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு

# கனகபுரம் வீதியிலுள்ள வர்த்தகர்களுக்கு கடிதம்

(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வீதிக்குரிய பகுதியில் வியாபார நிலையங்களை அமைத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் வியா பாரிகள் அதனை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி வர்த்தகர்கள் 87 பேருக்கு கரைச்சி பிரதேச சபை இறுதி அறிவித்தல் அனுப்பி வைத்துள்ளது.

கனகபுரம் வீதியில் வீதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அதனை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அகற்ற வேண்டுமெனவும் கோரியே இக் கடிதம் பிரதேச சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


குறித்த வீதியானது முப்பது மீற்றர் அகலமுடையது. இரண்டு பக்கங்களிலும் உள்ள வியாபாரிகள் தங்களின் வியாபார நடவடிக்கைகளை வீதியின் மத்தியிலிருந்து 15 மீற்றர் சுமார் 50 அடிக்கு அப்பால் மேற்கொள்ள வேண்டும். ஆனால் பெரும்பாலான வியாபாரிகள் வீதிக்கு மிகமிக அருகில் தங்களின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சில வியாபார நிலையங்களில் வாகனங்களில் செல்கின்றவர்கள் தங்களுடைய வாகனங்களிலிருந்து இறங்காது வீதியில் நின்றபடியே பொருட்களை கொள்வனவு செய்யுமளவுக்கு வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன. இது போக்கு வரத்துக்கும், பொது மக்களுக்கும் பெரும் இடையூறாக இருப்பதோடு, வடிகாலமைப்பை மேற்கொள்ள முடியாத சூழலையும் ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு எதிர்கால நகரின் திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடையாகவும் வீதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் காணப்படும் வியாபார நடவடிக்கைகள் காணப்படுகிறது எனப் பல தரப்பினர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில் கரைச்சி பிரதேச சபை குறித்த 87 வியாபாரிகளுக்கும் 2016-05-04, 2016-12-24, மற்றும் 2017-07-30 ஆகிய கலந் துரையாடலின் தீர்மானத்திற்கு அமைவாகவும் தற்போது இறுதி அறிவித்தல் விடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலுக்கு அமைய கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வீதிக்குரிய பகுதியில் வியாபார நிலையங்களை அமைத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகள் அதனை அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கரைச்சி பிரதேசசபை தனது இறுதி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது. (2-312)

# புலோப்பளை பிரதான வீதியை செப்பனிடுங்கள்

## பிரதேச மக்கள் அமைதிப் பேரணி





(பரந்தன்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் புலோப்பளை பிரதான வீதி பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாது இருப்பதனை சுட்டிக் காட்டியும் இதற்கான தீர்வினைக் கோரியும் புலோப்பளை பிரதேச மக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து இவ் அமைதிப் பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை நடைபெற்ற இப் பேரணியில் புலோப்பளையில் இருந்து அமைதியான முறையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை ஊர்வலமாக சென்ற மக்கள் தமது கோரிக்கைகள் அடங் கிய மகஜர் ஒன்றை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த கிராம மக்கள், மேற்படி வீதி புலோப்பளை கிழக்கு , புலோப்பளை மேற்கு, அல்லிப்பளை, அறத்தி நகர், பளை மத்தி ஆகிய கிராமங்களின் பிரதான வீதியாகவும் காற்றாலை, மிருக வைத்திய சாலை, தும்புத் தொழிற்சாலை, முன்பள்ளி, பாடசாலைகள் போன்ற முக்கிய இடங்களிற்கான பயன்பாட்டு வீதியாகவும் பெரிய பளை, கச்சார்வெளி, முல்லையடி, செல்வபுரம் போன்ற கிராமங்களின் உப வீதியாகவும் கடலுக்கான வீதியாகவும் பயன்படுத்தப்படுகின்றது பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் முக்கிய வீதியை இதுவரை ஏன் கவனிக்காது திரும்பியும் பாராதிருக்கிறார்கள் என்ற காரணம் புரியவில்லை. காற்றாலையிடமிருந்து வடக்கு மாகாண சபை பெறும் இட வாடகையை இப் பிரதான வீதிக்கு நினைத்திருந்தால் பயன்படுத்தியிருக்கலாமென்ற விடயத்தை கருத்தில் கொண்டு வருவதோடு பாடசாலை மாணவர்கள். முதியவர்கள். கர்ப்பிணித் தாய்மார், உத்தியோகத்தரென அனைவருமே பல இன்னல்கள் மத்தியில் பயன்படுத்தும் இவ்வீதியை அரசியல் பிரமுகர்களே கட்சி பேதங்களின்றி செப்பனிட்டுத்தாருங்கள், அரச உயரதிகாரிகளே கருத்தில் கொள்ளுங்கள். அனர்த்தங்களான பின் ஆற்றும் உரைகள் வடிக்கும் நீலிக் கண்ணீர்கள் பயன்தரா. ஆதலால் செயற்பட முன்வாருங்கள் எனக்கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பில் மக்களுக்கு கருத்துத் தெரிவித்த பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ப.ஜெயராணி, குறித்த வீதி தொடர்பில் கடந்த கால அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ் வீதி. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வீதி என்பதால் அவர்களுடனும் பேசப்பட்டது. இவ்வீதி புனரமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் வருகின்ற வருட இறுதியில் புனரமைப்புப் பணிகள் நடைபெறும் எனத் தெரிவித்தார். (2-312)




# கடற்றொழில் பல்கலையை அமைப்பதற்கு நில அளவீட்டை விரைந்து ஆரம்பியுங்கள்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு அபிவிருத்தி ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் தொகையில் 17 வீதமான மக்கள் கடற்றொழிலை வாழ்வாதாரத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருவதுடன், அதிகளவான கரையோரப் பகுதியைக் கொண்ட மாவட்டமாகவும் காணப்படுகின்ற நிலையில் இங்கு கடற் றொழில் பல்கலைக் கழகம் ஒன்றினை அமைக்க வேண்டுமென தொடர்ச்சியாக பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் முல்லைத்தீவு அபிவிருத்தி ஒன்றியம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அதாவது யாழ்.பல்கலைக் கழகத்தின் மீன்பிடித் துறைப்பீடம் அமைத்தல் தொடர்பில் இதுவரை எந்த வேலைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிபார்சிற்கு அமைவாக முல்லைத்தீவில் அமைக் கப்பட்ட குறித்த பிரிவிற்கான நிலத்தினை யாழ்.பல்கலைக் கழகம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்ததாகவும் அதற்கமைய பிரதேச செயலாளரால் வட்டுவாகல் பகுதியில் 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது.

அதற்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. எனவே இதனையமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முல்லை அபிவிருத்தி ஒன்றியப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த பல் கலைக்கழகத்தை அமைப்பதற்கான நிலத்தை நில்அளவை செய்து பிரிவை ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-315)

# உறுதியுடன் போராடுவதே தீர்விற்கு வழிவகுக்கும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் அமைச்சர் அனந்தி தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று எண்ணி எண்ணி அழுது புலம்பிய காலங்களைக் கடந்து விட்டோம். மாறா உறுதியுடன் நிற்பது ஒன்றே தீர்விற்கான வழியாகும் என்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரிற்கு நீதி கேட்டுப் போராடி வரும் அவர்களது உறவினர்களைச் சந்தித்த போது வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கூறினார்.

இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் அவர்களது உறவுகள் 251 நாட்களைக் கடந்தும் தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

அவ்வாறு 251 ஆவது நாளாக முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்திற்கு முன்பாக போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களை கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் சந்தித்து கலந்துரை யாடியிருந்தார். அப்போது அவர் மேலும் கூறுகையில்,

இறந்து விட்டார்கள் என்றால் அதனால் மனதில் ஏற்படும் துக்கம் காலப் போக்கில் ஆறிவிடும். ஆனால் இருக்கிறார்களோ இல்லையோ என்பது கூடத் தெரியாது. நாம் படும் துயரம் கறையான் அரித்தது போன்று பெரும் மன வேதனையை தந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையால் நானும் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் உங்கள் வலிகளையும் வேதனைகளையும் என்னால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

எமது கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் சர்வதேசம் மற்றும் அரச தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் சமரசங்களை ஏற்காது நாம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதன் மூலமே எமது பிரச்சினைகள் குறித்து பேசியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளோம். இல்லையென்றால் எமது விடயம் எப்போதோ கைகழுவி விடப்பட்டிருக்கும்.

என்னைச்சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளிடம் காணாமல் ஆக்கப்பட்டோரிற்கு உரிய நீதி கிடைக்க வேண்டியதன் கட்டாயத்தினை எடுத்துக்கூறுவதுடன் அவர்களுக்கான நீதி கிடைக்கும் வரை உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம் என்று அழுத்தம் திருத்தமாகவும் கூறி வருகின்றேன் என்றார். (2-4)

# இரு குழுக்களுக்கிடையில் கைகலப்பு; அடிதடியில் முடிந்ததில் 4 பேர் காயம்

(பூநகரி)

பூநகரி வலைப்பாட்டில் ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தின் ஜெகமீட்பர் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் 5.45 மணியளவில் உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இரு குழுக்களாகப் பிரிந்து இருபகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பு அடிதடியாக மாறியதில் காயமடைந்த நால்வர் பூநகரி வேரவில் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மூவர் நோயாளர் காவு வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை காயம் அடைந்த ஒருவர் தொடர்ந்தும் வேரவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பில் நாச்சிக் குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விளையாட்டு வீரர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இதில் கைகலப்பில் ஈடுபட்ட இரு பகுதியினர் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றும் அதுவே கைகலப்பிற்கு காரணம் எனவும் ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் நாச்சிக் குடா பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-84)

# ரோபோ தொழில்நுட்பத்திற்கான நிலையம் வலுப்படுத்தப்படும்

"நீலப் பசுமை" எனும் தொனிப் பொருளில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (பட்ஜெட்-2018) (09.11.2017) நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.



## நீலப்பசுமை பட்ஜெட்-2018

88. வருடாந்தம் ஐ.அ. டொ 10 மில்லியனை விடக் குறைவான ஏற்றுமதிப் பெறுமதிகளைக் கொண்டுள்ள உள்ளூர் கம்பனிகளுக்கும் உலக சந்தையில் பிரவேசித்து பூகோள பெறுமதிச் சங்கிலியில் இணைவதற்கான வாய்ப்புக்கொண்டுள்ளபடுமுகக் கம்பனிகளுக்கும் வர்த்தக சரிப்படுத்தல்) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக "ஏற்றுமதிச் சந்தைப் பிரவேச ஒத்துழைப்பு" நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டம் பின்வருவனவற்றிற்கு வசதியளிக்கும்.

89. இலவச மாதிரிகளின் வழங்கல் செலவினங்கள், புலமைச் சொத்துக்களின் பதிவு, காப்புறுதி மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புச் செலவினங்கள் ஆகியன உள்ளடங்கலான உடன்பாட்டுச் செலவினங்களைப் பூர்த்தி செய்தல்.

90. 36 மாத காலப் பகுதிக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் உள்ளூர் வியாபார உற்பத்திப் பொருட்களின் மூலம் வைத்திருக்கப்பட்ட சில்லறைக் கடைகளின் இடவசதிக்கான அல்லது ராக்கைகளின் இடவசதிக்கான வாடகைச் செலவைப் பூர்த்தி செய்வதற்கு ஆதரவளித்தல். ஏற்றுமதிச் சந்தைப் பிரவேச உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் ரூபா 800 மில்லியனை நாம் ஒதுக்கீடு செய்யவுள்ளோம். (ரூ. 800 மில்.)

91. "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்தின் ஊடாக தொழில்நுட்ப மாற்றல் மற்றும் நுட்ப அறிவு உள்ளடங்கலாக ஏற்றுமதியாளர்களுக்கான உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி உதவிக்கு வசதியளிக்கப்படும்.

92. முன்மொழியப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான உத்தரவாத நிதியம், கடன் தகவல் பணியகத்தின் நிரலில் உட்படுத்தப்பட்டுள்ள ஆனால் ஏற்றுமதி செய்யக் கூடிய சாத்தியப்பாடு இருந்தும் அவற்றைச் செயற்படுத்துவதற்கான நிதி வசதிகளை இன்னும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் ஏற்றுமதியாளர்களுக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் உத்தரவாதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வங்கிகளிடமிருந்து நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

93. தேசிய தரமான உட்கட்டமைப்புப் பரிசோதனை வசதிகளை வலுப்படுத்தும் எமது கொள்கைக்கு ஏற்ப, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை தரப்படுத்தல் கட்டளைகள் பணியகம், தேசிய தொற்றுத் தடைகாப்பு நிலையம், தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அவற்றிற்கு ஒருநிலைப்பட்ட நிறுவனங்கள் சர்வதேச சான்றுப்படுத்தும் நிறுவனங்களின் தரத்திற்கு ஏற்ப தர முயர்த்தப்படும். இந்நிலைமையானது எமது உற்பத்திப் பொருட்கள் உலகளாவிய சந்தையில் ஏற்றுக் கொள்வதற்கான வசதிகளை அளிப்பதோடு, முன்மொழியப்பட்ட இறக்குமதிக் கண்காணிப்பு மற்றும் வசதியளிப்புத் திட்டத்திற்கும் வசதியளிக்கும். (ரூ. 250மில்.)

94. தேசிய புலமைச் சொத்துக்கள் நிறுவனம் தரமுயர்த்தப்படவுள்ளதோடு, சிறந்த வளங்களுக்கான ஏற்பாடும் செய்யப்படும். (ரூ. 25 மில்.)

95. அதிகரித்துவரும் கேள்விகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும், வியாபாரத்திலிருந்து நுகர்வோருக்கு (பீ இலிருந்து சீ) இ-வர்த்தகக் கொடுக்கல்-வாங்கல்களுக்கு வசதியளிக்கும் நோக்குடனும், இக்கொடுக்கல்-வாங்கல்களை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியளவில் முதலீட்டுச் சபையினாலும் சுங்கத் திணைக்களத்தினாலும் செயன்முறைமையொன்று ஸ்தாபிக்கப்படும்.

96. மிக அதிகமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள கரை கடந்த வியாபாரம், துறைமுக நுழைவு வர்த்தகம், களஞ்சியங்கள், பல நாடுகளை ஒன்றிணைப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் வர்த்தகம், முன்னரங்குச் சேவைகளை உள்ளடக்கிய பொருட்களைப் பரிமாற்றும் மையம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும். ஆயினும், இவ்வாய்ப்புக்களிலிருந்து முழுமையான பயனைப் பெற வேண்டுமாயிருந்தால் ஒரு சில ஒழுங்கு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறான திருத்தங்களுக்கு, தொழில் மூலதனம், பெயரிடப்பட்ட வலயங்களை விரிவடையச் செய்தல், மற்றும் நவீன மயப்படுத்தப்பட்ட செயற்பாட்டு வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக நடைமுறையிலுள்ள முதலீட்டிற்கான சட்ட சட்டகத்தின் தாராளமயமாக்கலையும் உள்ளடக்கியுள்ளது.

97. நவீன பொருட்களின் பரிமாற்றல்கள் மற்றும் கடல்சார் கைத்தொழில்களின் கேள்வியைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வர்த்தக மற்றும் கப்பற்றுறை சட்டம் என்பனவும் திருத்தம் செய்யப்படும். சிறந்த போட்டியொன்றினை உறுதிப்படுத்துவதற்காக சுயாதீன துறைமுக ஒழுங்குமுறையாளர் ஒருவர் அறிமுகப்படுத்தப்படுவார். கப்பற்றுறை நடவடிக்கைகள் மற்றும் பொருட்களின் கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொள்ளும் நிறுவனங்களின் வெளிநாட்டு உரித்து தொடர்பான கட்டுப்பாடுகள் குறைக்கப்படும். இதன் மூலம் பிரதான சர்வதேச கப்பற்றுறை கம்பனிகள் மற்றும் பொருட்களை பரிமாற்றம் செய்யும் இயக்குநர்கள் அவர்களின் செயற்பாடுகளை இலங்கையிலிருந்து செயற்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

98. அரசாங்கத்தினால் உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்னியந்திர நிறுவனங்களை நாட்டிற்குள் எடுத்து வருவதற்கும் மற்றும் அதன் மூலம் பெறுமதிச் சங்கிலி இணைப்புக்களை உருவாக்குவதற்கு அல்லது இலங்கையில் இலத்திரனியல் மற்றும் மின்னியந்திரங்களின் ஏற்றுமதியாளர்களுடன் கூட்டு முயற்சியொன்றினை மேற்கொள்வதற்கு பங்களிப்புச் செலுத்தும் முழுமையான பல தேசியக் கம்பனிகளின் அடைவிற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். (ரூ. 25 மில்.)

99. திண்மக் கழிவு முகாமைத்துவத் தொழில் முயற்சிகள், பாரிய அளவிலான மருந்துப் பொருட்களின் முதலீடுகள், மற்றும் பாற்பண்ணைக் கைத்தொழில் போன்றனவற்றிற்கான நிர்மாணக் காலப் பகுதியின் போது கடன் முறி வசதிகளின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் மீதான வரி விலக்குகளையும் நாம் வழங்குவோம்.

100. வர்த்தகப் புள்ளிவிபரங்கள், ஒழுங்கு முறைத் தேவைப்பாடுகள், ஏற்றுமதி / இறக்குமதிச் செயன்முறைகள் போன்றன உள்ளடங்கலாக வர்த்தக ஊக்குவிப்புக் கருவிகள் மற்றும் நம்பகரமான வர்த்தகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்றுமதியாளர்களை அங்கீகரிக்கும் வர்த்தக இணையத்தளம் (இலத்திரனியல் தகவல் தளம்) ஒன்று இலங்கைச் சுங்கத் திணைக்களம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஸ்தாபிக்கப்படும். (ரூ. 25 மில்.)

101. ஆராய்ச்சிகளை வர்த்தக தொழில் முயற்சிகளாக மாற்றக் கூடிய வகையில் தொழில்நுட்ப மற்றும் புதிய கண்டு பிடிப்புகள் தொடர்பான குழு (COSTI) தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களின் ஒருங்கிணைப்பு அதிகார சபையாக (NASTICA) மாற்றப்படும். (ரூ. 25 மில்.)

102. "கைத்தொழில் முனைப்புக்கான புத்தாக்க (I2I)" திட்டத்தினை அறிமுகம் செய்வோம். இது சிறந்த மற்றும் திறமையுள்ள புதிய படைப்புகளை உருவாக்கக் கூடிய உள்ளங்களை எமது கைத்தொழில்களுடன் இணைப்பதற்கு வசதிகளையும் ஆதரவையும் வழங்குவோம். உண்மையில் இதன் மூலம் புதிய கண்டுபிடிப்பாளர்களும் கைத்தொழிலாளர்களும் நன்மையடைவார்கள். (ரூ. 25 மில்.)

06

103. கடந்த வருடம், நாம் ஒரு நிதியத்தினை ஸ்தாபிப்பதன் ஊடாக உற்பத்திப் பொருட்களுக்கான வடிவமைப்புப் பொறியியலுக்கு ஆதரவளித்தோம். நீண்ட கால கடன் வசதியளிப்பு (LTLE), தர நியமங்கள், பயிற்சி, நிதிச் சுட்டிகள் மற்றும் பரிசோதனை வசதி யளிப்பு தொடர்பான ஆதரவுச் சேவை களை உள்ளடக்கிய மொசாட்ரொனிக் எனப்படும் சகல பொறியியல் முறை மைகளும் ஒன்றிணைக்கப்பட்ட பல் தொழில்நுட்ப முறைமையின் ஊடாக உற்பத்தி வடிவமைப்பு பொறியியல் முன் னெடுப்புக்களுக்கு ஆதரவளிப்பதனை நாம் தொடர்வோம். (ரூ. 350 மில்.)

104. அரசாங்க புதிய கண்டுபிடிப்பு இடைவெளிகளுக்கு ஆதரவளிக்கும் அதே வேளை, ரோபோ தொழில்நுட்பத்திற்கான நிலையம் மேலும் வலுப்படுத்தப்படும். (ரூ. 50 மில்.)

105. கடற் சுற்றுலாவிற்கான மார்க்கங்களை உருவாக்கும் அதேவேளை, படகு நிர்மாணக் கைத்தொழிலானது ஏற்றுமதிக் கைத்தொழிலொன்றாக மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பொன்று உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. அந்த வகையில், தரப்படுத்தல் மற்றும் தர உறுதிப்பாட்டிற்கான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் திருகோணமலை, கொக்கலை நீர் நிலைகளை அக்கைத்தொழிலுக்கென அர்ப்பணிக்கப்பட்ட கைத்தொழில் வலயங்களை உருவாக்குதல் உள்ளடங்கலாக இக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வசதியளிப்புக்களை மேற்கொள்வதற்கு அவசியமான ஒழுங்கு விதிகளையும் அறிமுகப்படுத்துவோம். இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் உள்ள கம்பனிகளின் மூலம் உள்ளூர் முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற கம்பனிகளுக்கு சிறிய அளவிலான சிறிய படகுகளின் விற்பனை மீதான ஒரே முறையில் செலுத்தப்படும். தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியிலிருந்து விடுவிக்கப்படும். (ரூ. 100 மில்.)

106. எமது நாட்டுக்கு வாசனைத் திரவியங்கள் மற்றும் சார்ந்த கைத் தொழில்களில் போட்டித்தன்மை வாய்ந்த நன்மைகள் இன்னும் கிடைத்த வண்ணமுள்ளன. அவற்றிற்கான எமது ஆதரவுகள் பின்வருமாறு:

107. இலங்கையின் அடையாளத்தினைப் பாதுகாப்பதன் மூலம் சிறந்த தரமான உற்பத்திப் பொருட்களை உறுதிப்படுத்துவதற்கான இறுக்கமான ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்படும்.

108. 1,000 நாற்று மேடைகளை உருவாக்குவதன் மூலம் கறுவா மற்றும் மிளகுக் கைத்தொழிலுடன் தொடர்புடைய உயர் தரத்திலான நாற்றுக்களின் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வெகுமதிகளை வழங்குவதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் பெறுமதிச் சேர்ப்பிற்கான ஆதரவளிக்கப்படும். (ரூ. 50 மில்.)

109. கறுவா பயிற்சிக் கல்லூரியின் செயற்பாடுகள் வலுப்படுத்தப்படும். (ரூ. 50 மில்.)

110. நடுத்தர காலத்தில் தேயிலைக் கைத்தொழிலுக்கான வருமான மாதிரி ஒன்று அபிவிருத்தி செய்யப்படும்.

111. தேயிலை சிறு பற்று நில உடமையாளர்களின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான உதவி வலுப்படுத்தப்படும். (ரூ. 250 மில்.)

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# 6 கோட்டைகள் அபிவிருத்தி

112. உள்ளூர் தெங்கு உற்பத்தியாளர்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு, உள்ளூர் தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய்ப் பூவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களின் மீதான தேசக் கட்டுமான வரியானது ஒரு வருட காலப்பகுதிக்கு நீக்கப்படும். அத்துடன் பின்வரும் பிரேரணைகளையும் நான் முன்வைக்கின்றேன்

113. தேங்காய்ப் பூவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சகல உற்பத்திப் பொருட்களுக்கான சர்வதேச தர நியமங்களுக்கு இணங்க கட்டாய பொதியிடல், பெயரிடல், தரப்படுத்தல் போன்றனவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்படும்.

114. தெங்குப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வோரிடமிருந்தான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக கலப்புத் (hybrid) தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஆதவளித்தல்.(ரூ. 25 மில்.)

115. இறப்பர் கைத்தொழிலாளர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட இறப்பர் கைத்தொழில் பிரதான திட்டம் ஒன்றிலொன்று வேறுபட்ட 22 கருத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் உற்பத்திப் பொருட்களின் புதிய கண்டு பிடிப்புகளை மையமாகக் கொண்ட மூலப்பொருட்களின் அடிப்படையையும் மற்றும் தயாரிப்புக்களையும் இக்கருத்திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன. இவற்றிற்கு புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் ஆதரவளிக்கப்படும்.(ரூ. 50 மில்.)

116. ஏற்றுமதிக் கைத்தொழில் மூலம் ஈட்டுத்தரக் கூடிய குறிப்பிடத்தக்க அளவிலான ஏற்றுமதி வருமானத்தினைக் கருத்திற் கொண்டு நாட்டின் விவசாயக் கைத் தொழில் உபாயத்தின்பிரதான ஒரு பகுதியாக கோழிப்பண்ணைக் கைத் தொழில் கருதப்படுகின்றது. அந்த வகையில்,

117. உள்ளூர் சோள உற்பத்தியின் பற்றாக்குறையின் காரணமாக உருவாக்கப்பட்ட எந்தவொரு இடைவெளியையும் நிரப்புவதற்காக மாத்திரமே சோளம் இறக்குமதி செய்ய முடியும் என்ற அடிப்படையில் சோள இறக்குமதி தாராளமயமாக்கப்படும்.

118. உயிருள்ள கோழிகளின் இருப்பை வருடாந்தம் 110 மில்லியனிலிருந்து 500 மில்லியன் வரை அதிகரிக்கும் நோக்குடன் நவீனமயமான கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படாத அரச பண்ணைகளும் மற்றும் இக்கைத்தொழிலுக்குப் பொருத்தமான காணிகளும் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

119. முன் மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் காரணமாக எமது பழங்களுக்கு விசேடமாக பப்பாசி மற்றும் அன்னாசிப் பழங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான ஏற்றுமதி வாய்ப்புக்கள் கிடைக்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. அந்த வகையில், இப்பழங்களுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஹொரண மற்றும் மாக்கந்துர ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்திற்கு நுண் பரவல் முறைமைகளையும் அவசியமான தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துவதன் மூலமும் உயர் விளைச்சலைக் கொண்ட நாற்றுக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமான ஆதரவு வழங்கப்படும். அதற்கு ஒப்புரவாக, வயம்ப பல்கலைக்கழகத்தில் பாற்பண்ணைக் கைத்தொழில் உள்ளடங்கலாக உணவு, தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகிய துறைகளை உள்ளடக்கிய நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கும் ஆதரவளிக்கப்படும்.(ரூ. 125 மில்.)



## நீலப்பசுமை பட்ஜெட்-2018

120. உலகளாவிய சந்தைகளில் இலங்கையின் மலர்ச்செய்கையுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வியினை கருத்திற் கொண்டு இக்கைத்தொழிலை புதிய சந்தைகளில் உட்பிரவேசிக்கச் செய்வதற்கு மலர்ச்செய்கை பேரவை ஒன்றினை தாபித்தல் உள்ளடங்கலாக தேவையான உட்கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கும் ஆதரவளிப்போம்.(ரூ. 10 மில்.)

121. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான ஏற்றுமதி வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கையின் இரத்தினக்கற்களை வெட்டும் கைத் தொழில் உயர் வகுப்பைச் சேர்ந்த நுகர்வோருக்கு சிறந்த சேவை வழங்கும் கைத்தொழிலொன்றாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில், அதன் பிரகாரம் இக்கைத் தொழிலை விருத்தி செய்வதற்காக,

122. இரத்தினக்கற்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்கள் மீதான தேசக் கட்டுமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

123. இக்கைத்தொழிலின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் ஆய்வு கூட வசதிகளை விருத்தி செய்தல் உள்ளடங்கலாக இக்கைத்தொழிலின் வளர்ச்சிக்கு வசதியளிக்க வேண்டியுள்ளதால், தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையின் கட்டமைப்பும், கொள்கைகளும் சீரமைக்கப்படும்.

124. மரப்பலகை மற்றும் மரப்பலகை சார்ந்த தயாரிப்புப் பொருட்களுக்கான வாய்ப்பானது அதிகமாக இருந்தாலும் கூட, அவை போதிய அளவில் பயன்படுத்தப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. அந்த வகையில், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைந்து மரப்பலகை மற்றும் மரப்பலகையுடன் சார்ந்த தயாரிப்புப் பொருட்களுக்கான வடிவமைப்பு நிலையமொனறு ஸ்தாபிக்கப்படும். (ரூ. 25மில்.)

### சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவித்தல்

125. சுற்றுலாக் கைத்தொழிலானது உயிரோட்டமுள்ள ஒரு கைத்தொழிலாகக் காணப்படுகின்றது. உல்லாசப் பிரயாணிகளின் வருகையானது 2020 ஆம் ஆண்டளவில் கிட்டத்தட்ட 4.5 மில்லியன் வரை மூன்று மடங்குகளால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் இயற்கை அழகு, மரபுரிமைகள், உணவு மற்றும் கலாசாரம் போன்றனவற்றை அதிகளவில் அவர்களுக்கு வழங்கக் கூடியதாக உள்ளது. அந்த வகையில், சுற்றுலாக் கைத்தொழிலுக்கான எமது ஆதரவுகள் பின்வருமாறு:

126. சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சி, தற்போது நடைமுறையிலுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை விட கேள்வியொன்றை உருவாக்குகின்றது. இச்சூழ்நிலையில் "ஹோம் ஸ்டே" (Home Stay) போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும். அவ்வாறான வசதியளிப்புக்களை தரமுயர்த்துவதற்காக விசேட கடன் வசதியளிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும்.(ரூ. 10 மில்.)

127. முறைசார் மற்றும் முறை சாரா துறைகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை வழங்குவோருக்கு சம அளவிலான வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய நிலைமையை உருவாக்கும் நோக்குடன் சுற்றுலா சேவைகளை வழங்கும் சகல்ரையும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவு செய் வதற்கும், முறைசாராத் துறை துறையை விரிவான வரி வலையமைப்புக்குள் கொண்டு வருவதற்கும் ஆலோசனை செய்கின்றேன். சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையில் வதியும், மற்றும் வதியாதோர் நிகழ்நிலை பிர யாண முகவர் நிலையங்கள் (Online Travel Agents) மேற்கொள்ளும் வர்த்தக நடவடிக்கைகளினால் உழைத்த ஆதாயத்தில் அல்லது சேர்க்கப்பட்ட தரகுக் கட்டணங்களில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இலங்கையில் ஒதுக்குகளிலிருந்து உழைத்த ஆதாயத்தில் அல்லது சேர்க்கப்பட்ட தரகுக் கட்டணங்களில் 1 சதவீதத்தை வரியாக விதிக்கவுளளோம்.

128. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு சில உணவு மற்றும் பானங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள சுங்க வரியல்லாத இறக்குமதிகளின் மீதான வரி நீக்கப்படும். (இப்பட்டியல் தொழில்நுட்பக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

129. மதுபான உரிமக் கட்டணக் கட்டமைப்பு ஒழுங்குபடு த்தப்படும். இதன் மூலம் விருந்தினர் இல்லங்கள் சாதாரண ஹோட்டல்கள் (Boutique Hotels) போன்ற இடங்க ளில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்ப டுத்தும் நோக்குடன் உரிமம் வழங்கல் பொறிமுறையொன்று மறுசீரமைக்கப் படும். இவ்வுரிமத்தினை வழங்குவதற்கு வரிக் கோவை இலக்கமொன்றினை வைத்திருத்தலானது அவசியமான ஒரு காரணியாகும்.

130. இலங்கை சுற்றுலா அபிவிருத் தி அதிகார சபையுடனும், மற்றும் இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடனும் இணைந்து சுற்றுலாத்து றைக்கான சில மையத் தளங்களை அபிவிருத்தி செய்வதனையும் நோக்க மாகக் கொண்டுள்ளோம். அது பின்வரு வனவற்றை உள்ளடக்கியுள்ளது.

07

131. தனியார் துறையினதும் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தினதும் ஆதரவுடன் சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தினால் மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை பிரெட்றிக் கோட்டை, மன்னார் கோட்டை/அல்லி, ராணிக் கோட்டை மற்றும் கற்பிட்டி கோட்டை உள்ளடங்கலாக 6 கோட்டைகள் அபிவிருத்தி செய்யப்படும்.(ரூ.250 மில்.)

132. நானு ஓயா, காலி, எல்ல மற்றும் கொழும்புக் கோட்டை ஆகிய புகையிரத நிலையங்கள் தொல் பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளதோடு, தனியார் துறையின் ஆதரவுடன் அவற்றின் உண்மையான தொல்பொருள் அடையாளத்தினை பாதுகாப்பதன் மூலம் மிகச் சிறந்த புகையிரத பிரயாண அனுபவமொன்றினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நவீனமயப்படுத்தப்படும்.(ரூ. 75 மில்.)

133. சுற்றுலாத்துறைக்கு ஆதரவளிப்பதற்காக அரச தனியார் பங்கேற்புடன் சீகிரியா, மட்டக்களப்பு, சீனக் குடா மற்றும் கொக்கலையில் உள்ளூர் விமான நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

134. ஆகாய விளையாட்டுக்களுக்குப் பொருத்தமான பிரதேசங்கள் இனங் காணப்படும். இது முப்பரிமாண எல்லைகளாக வரையறுக்கப படுவதோடு, "ஆகாய விளையாட்டுக்களுக்கு திறந்து விடப் பட்ட ஆகாய வெளியாக" எல்லைகள் நிர்ணயிக்கப்படும். இவ்விளையாட்டுக்களுள் டிரிஜிபில்ஸ் (Dirigibles), ஹெங் க்ளைடிங் (Hang gliding), பரசூட், பரா-க்ளைடர்ஸ் (paraGliders) மற்றும் பலூன் (ballooning) போன்றன உள் ளடங்குகின்றன என்பதுடன் அவ்விளை யாட்டுக்களுக்கு உரிய மின்வலுவில் இயங்காத உபகரணங்களின் இறக்குமதி மீதான தேசக் கட்டுமான வரி மற்றும் துறைமுக விமான நிலைய அபிவிருத்தி வரி என்பன நீக்கப்படும்.

135. உயர் நிலை சபாரிகளுக்கு பயன்படக்கூடியவாறு மாதுறு ஓயா மற்றும் கல்லோயா தேசியப் பூங்காக்கள் அபிவிருத்தி செய்யப்படும். காப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரமல்லாமல் சுற்றுலாவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தக் கூடியவாறு வன பிராந்திய அலுவலர்களின் இயலளவு விருத்தி செய்யப்படும். (ரூ. 75 மில்.)

136. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் கரையோரங்களில் 25 உயிர்காப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். உல்லாசப் பிரயாணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் பிரபல்யம் வாய்ந்த சுற்றுலாப் பிரசேதங்களில் 20 சுற்றுலா காவல் துறை அலகுகளை வலுப்படுத்துவதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து செயற்படும்.(ரூ. 30 மில்.)

137. தோணி, ஓடங்கள், பட்டமிடல் உபகரணங்கள் (Kite Surfing Equipment) போன்ற இயந்திரமல்லாத நீர் விளையாட்டுக்களுக்கான உபகரணங்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய வரி மற்றும் தேசக் கட்டுமாண வரி விலக்களிக்கப்படும். மின்சக்தியில் இயங்கும் விளையாட்டு வாகனங்கள் தொடர்புடைய வரியை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். (தொடரும்)




# சசிகலா உறவினர் வீடுகளில் 5-வது நாளாக சோதனை நீடிப்பு

## ஆவணங்களை மதிப்பிடும் பணி தீவிரம்



(சென்னை)

சசிகலா உறவினர் வீடுகளில்நேற்று 5 ஆவது நாளாக வருமான வரி சோதனை நீடித்தது. இதுவரை கைப்பற்றப்பட்ட சொத்து ஆவணங்களை மதிப்பிடும்பணி யில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

வருமான வரித்துறை "ஆபரேஷன் கிளீன் மணி" என்ற பெயரில் வரி ஏய்ப்பு செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணியை தொடங்கியிருக்கிறது.

அந்தவகையில் தமிழ்நாட்டில் சென்னை, தஞ்சை, திருச்சி, நாமக்கல் கோவை, கொடநாடு உள்ளிட்ட இடங்களிலும் மற்றும் பெங்களூர்,



ஐதராபாத், டில்லி, புதுச்சேரியிலும் கடந்த 9ஆம் திகதி வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடியாக சோதனை மேற்கொண்டனர். சசிகலாவின் உற வினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் 187 இடங்களில் சுமார் 1,800 அதிகாரிகள் ஈடுபட்டனர்.

சசிகலா, டி.டி.வி.தினகரன், திவாகரன், நடராஜன், இளவரசியின் மகன் விவேக் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் ஆகியோரின் நிறுவனங்கள், அலுவலகங்கள், வீடுகள் ஆகியவற்றில் தொடங்கிய இந்த சோதனை இடைவிடாமல் நேற்று 5 ஆவது நாளாக நீடித்தது.

சென்னை தியாகராயநகர் அபிபுல்லா சாலையில் சசிகலாவின் அண்ணன் மகள் கிருஷ்ணாபிரியா வீட்டில் வருமான வரித்துறை கூடுதல் கமிஷனர் சுபஸ்ரீ தலைமையில் 7 பேர் கொண்ட அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

கிருஷ்ணபிரியா பெயரில் உள்ள சொத்துகள், முதலீடுகள், அவருடைய வங்கி கணக்குகள் ஆகியவற்றின் ஆவணங்களையும், தங்கம்- வைர நகைகள் குறித்த விபரங்களையும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். பூஜை அறை, கழிப்பறை, படுக்கை அறை என வீடு முழுவதையும் ஆராய்ந்தனர்.

வீட்டின் சுவர்கள், பல்கனியையும் அதிகாரிகள் விட்டு வைக்கவில்லை. அங்கு ஏதேனும் நகை, பணம், ஆவணங்கள்மறைத்துவைக்கப்பட்டிருக்கிறதா? என்று அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இதேபோல்,

சென்னை ஈக்காட்டு தாங்கலில் உள்ள ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்திலும் 5 ஆவது நாளாக வருமான வரி சோதனை நடைபெற்றது. இந்த சோதனையின் போது, ஜெயா தொலைக்காட்சியின் பொது மேலாளர் நடராஜன் மற்றும் 4 கணக்குத்துறை மேலாளர்கள் என 5 பேரிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பொது மேலாளர் நடராஜன் வீட்டில் இருந்த சில ஆவணங்கள் ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட தாக கூறப்படுகிறது.

அதேபோன்று ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்து, தியாகராயநகரில் உள்ள ஜெயா தொலைக்காட்சி தலைமை நிர்வாக அதிகாரியும், சசிகலா அண்ணன் மகனுமான விவேக் ஜெயராமனின் வீட்டில் சோதனை நடத்தி கொண்டிருந்த வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பாக அவர்கள் விவேக்கிடம் விசாரணை மேற்கொண்டனர்.

ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்தில் இறுவெட்டுக்களில் பதிவு செய்யப்பட்டு இருந்த பல்வேறு ஆவணங்களை வருமான வரி அதிகாரிகள் தனியாக வேறு இறுவெட்டுகளில் பதிவு செய்து கொண்டதாக தெரிகிறது. மேலும், ஜெயா தொலைக்காட்சி கணக்குத்துறை அலுவலகங்களில் உள்ள கணனிகள் அனைத்தையும் வருமான வரித்துறை அதிகாரிகள் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தினர்.

நேற்று 5ஆவது நாளாக ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்தில் வருமான வரி சோதனை நடைபெற்ற நிலையில், விவேக்கின் அறையில் திறக்கப்படாமல் இருந்த பெட்டகம் ஒன்றை வருமான வரித்துறை அதிகாரிகள் திறந்து பார்க்க வேண்டும் என்று கூறி உள்ளனர். அதற்கான சாவி தன்னிடம் இல்லை என்றும், அது விவேக்கிடம் தான் இருப்பதாகவும் நடராஜன் தெரிவித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து மதியம் 2 மணி அளவில் சாவி கொண்டு வரப்பட்டு, பெட்டகம் திறக்கப்பட்டு அதனை வருமான வரித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்தில் தொடர்ந்து 5 நாட்களாக நடைபெற்று வந்த சோதனையும் நேற்றுடன் முடிவடைந்தது.

ஈக்காட்டுதாங்கலில் உள்ள அ.தி.மு.கவின் நாளிதழான நமது எம்.ஜி.ஆர். பத்திரிகை அலுவலகத்தில் நடைபெற்று வந்த வருமான வரித்துறை அதிகாரிகளின் சோதனை முடிவடைந்தது.

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே உள்ள மிடாஸ் மதுபான ஆலை மற்றும் அதன் பதிவு அலுவலகத்தில் தொடர்ந்து நேற்று 5 ஆவது நாளாக சோதனை நடந்தது. இதேபோல மதுபான ஆலைக்கு அட்டைப்பெட்டிகள் விநியோகம் செய்யும் ஸ்ரீசாய் எண்டர்பிரைசஸ், ஸ்ரீசாய் கார்டன்ஸ் ஆகிய நிறுவனங்களில் சோதனை நடந்தது.

இந்தசோதனையில்வெளிநாட்டிற்கு மதுபானங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது தொடர்பாக பல்வேறு ஆவணங்களை வருமான வரித்துறை அதி காரிகள் கைப்பற்றியதாக கூறப்படுகிறது.


இதன் அடிப்படையில் மதுபான ஆலை மேலாளர் மற்றும் அட்டைப்பெட்டி விநியோகம் செய்யும் ஸ்ரீசாய் எண்டர்பிரைசஸ், ஸ்ரீசாய் கார்டன்ஸ் ஆகிய நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகளிடமும், வருமான வரித்துறையினர் விசாரணை நடத்தினர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் சசிகலாவின் தம்பி திவாகரனுக்கு சொந்தமான மகளிர் கல்லூரி உள்ளிட்ட 14 இடங்களில் வருமான வரி சோதனை நடந்தது.

ஏற்கனவே 13 இடங்களில் சோதனை முடிவடைந்து விட்ட நிலையில் கல்லூரியில் மட்டும் நேற்று அதிகாலை வரை சோதனை நீடித்தது.

கடந்த 5 நாட்களாக இரவு, பகலாக கல்லூரியில் தொடர்ந்து நடந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஏராளமான ஆவணங்களை வருமான வரித்துறை அதிகாரிகள் 10 இற்கும் மேற்பட்ட கார்களில் எடுத்துச் சென்றனர்.

கல்லூரியில் உள்ள ஒரு அறைக்கு வருமான வரித்துறையினர் "சீல்" வைத்து உள்ளனர். அங்கு சில முக்கிய ஆவணங்கள் வைக்கப்பட்டு இருப்பதாக தெரிகிறது. (இ-7)

# ஈரான்-ஈராக்கில்



அதிர்வு உணரப்பட்டது. நில நடுக்கம் ஏற்... பகுதிக்கு மீட்புக் குழுவினர் விரைந்து செ...

(தெஹ்ரான்)

ஈரான், ஈராக் நாடுகளில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்திற்கு 250 பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

ஈரான் மற்றும் ஈராக் இடையேயான எல்லைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஈராக்கின் ஹலாப்ஜா நகரிலிருந்து 32 கிலோ மீற்றர் தொலைவில், ஈரான் பகுதிக்குட்பட்ட கெர் மன்ஷா மாகாணத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இது ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கம் காரணமாக இரு நாடுகளிலும் எல்லைப் பகுதிகள் கடுமையாக குலுங்கின. பொதுமக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஒன்று திரண்டனர்.

சில கட்டடங்கள் சரிந்து விழுந்தன. மின்கம்பங்கள் சாய்ந்தன. கட்டட இடிபாடுகளுக்குள் ஏராளமானோர் சிக்கிக்கொண்டனர்.

இந்த நிலநடுக்கத்தின் எதிரொலியாக ஈரானின் வடமேற்கு, வடக்கு மற்றும் மத்திய பகுதிகளிலும் நில

# 15 ஆயிரம் சடலங்கள்

# ஈராக்கில் பாரிய மனிதப் புதை...



(பக்தாத்)

ஈராக்கில் 400 சடலங்கள் ஒரே நேரத்தில் புதைக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 15 ஆயிரம் உடல்கள் வரை புதைக்கப்பட்டிருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் சண்டை நடக்கிற பகுதிகளில் இருந்து உள்ளூர் மக்கள் தப்பிச்செல்ல முயற்சிக்கையில் அவர்களைப் பிடித்துக்கொன்று விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கடந்த ஆண்டு பிரபல செய்தி நிறுவனம் ஒன்று 72 இடங்களில் இப்படி கொன்று புதைக்கப்பட்டவர்களின் பாரிய மனித புதை குழிகளைக் கண்டறிந்து, அவற்றில் 5 ஆயிரத்து 200 முதல் 15 ஆ... உடல்கள் வரை புதைக்கப்பட்டிருக்கலாம் ... அதிர்ச்சி தகவலை வெளியிட்டது.

இந்த பாரிய மனித புதைகுழிகள் குறி... ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து த...

# சவுதியில் சுதந்திரமாக உள்ளேன்

## லெபனான் பிரதமர் தெரிவிப்பு



(ரியாத்)

பதவி விலகலை முறையாக சமர்ப்பிக்க இன்னும் ஓரிரு நாட்களில் லெபனான் செல்லவுள்ளதாக லெபனான் பிரதமர் சாட் ஹரிரி அறிவித்துள்ளார். உயிரச்சுறுத்தல் காரணமாக பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக கடந்த வாரம் அறிவித்திருந்த சாட் ஹரிரி, நேற்றுமுன்தினம் ரியாத்தில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் பங்கேற்றிருந்த நிலையில் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் பதவி விலகிவிட்டேன். விரைவில் லெபனான் சென்று முறையாக பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிப்பேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், லெபனானுக்கு பாதகமான அதிர்ச்சி கொடுக்கவே இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


இவ்வாறிருக்க சாட் ஹரிரியை சவுதி அரேபியா பணயக் கைதி... வைத்திருப்பதாக அவருடைய கூட்டணி கட்சிகள் தெரிவிக்கின்றன. எனினும் அ... மறுத்துள்ள ஹரிரி, தன்னுடைய இராஜி... மாவுக்கு ஈரானிய ஆதரவிலான ஹில்புல்... இயக்கமே காரணம் என்றும் சவுதி அ... பியாவில் தான் சுதந்திரமாக இருப்பதாக... நினைத்தால் நாளையே லெபனான் செ... முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், அரபு நாடுகளில் ஈரான் தலை... வதே பிராந்தியத்தின் முக்கிய பிரச்சினை... காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ள...

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றா... லெபனானின் பிரதமராக கடந்த 2016 ... ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் தி... தேர்ந்தெடுக்கப்பட்ட சாட்ஹரிரியின் ... விக்காலம் 2020 ஆம் ஆண்டு டிசெ... மாதமே நிறைவடையும்.

இதற்கிடையில், லெபனானில் ஈரான் ஆ... கம் செலுத்தி வருவதால் தனது உயிருக்கு அ... றுத்தல் இருப்பதாகவும் அதற்கான இரக... திட்டமிடல்கள் இடம்பெறுவதாகவும் தெ... த்த ஹரிரி தனது பதவி விலகலை கடந்த வா... அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-...

# ல் கடும் நுகம்பம்; 250 பேர் பலி!





கம் ஏற்பட்ட
ரந்து சென்று

மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலநடுக்கத்தி னால் இரு நாடுகளிலும் சுமார் 250 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. கெர்மன்ஷா மாகாணத்தில் மட்டும் 180 இற்கும் மேற்பட்டோர் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கானோர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.

ஈராக்கில் 70 பேர் பலியானதாகவும், 50 பேர் மீட்கப் பட்டுள்ளதாகவும் குர்திஷ் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 30 இற்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர் முழு வீச்சில் மீட்பு மற்றும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ள் ஒரு இடத்தில்
## தைகுழி கண்டுபிடிப்பு



15 ஆயிரம்
கலாம் என்ற
கள் குறித்து,
நந்து தப்பிய

மக்கள் சாட்சியமளித்துள்ளனர்.

இப்போது ஐ.எஸ். பயங்கரவாதிகள் பிடியில் இருந்து பெரும்பான்மையான நகரங்களை, ஈராக் படைகள் சண்டையிட்டு மீட்டு விட்டன.

அப்படி மீட்கப்பட்ட நகரங்களில் ஒன்று, ஹவிஜா. இந்த நகரம், ஈராக் தலைநகரம், பக்தாத்தில் இருந்து 240 கி.மீ. தொலைவிலுள்ளது. இந்த நகரம், கடந்த மாதம்தான் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து வீழ்ந்தது.

இந்த நிலையில் அந்த நகரத்தில் 400 உடல்கள் ஒரே நேரத்தில் புதைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த குழியில் புதைக்கப்பட்ட உடல்களில் சில சாதாரண உடையுடனும், சில ஐ.எஸ். பயங்கரவாதிகள் மரண தண்டனை விதிக்கிறபோது அணிவிக்கிற உடையுடனும் (ஜம்ப்சூட்) காணப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

ஹவிஜா நகரையொட்டி அமைந்திருந்த விமானப்படை தளத்தைத்தான் ஐ.எஸ். பயங்கரவாதிகள்மரணதண்டனை நிறைவேற்றுகிற களமாக பயன்படுத்தி வந்துள்ளதாக கிர்குக் ஆளுநர் ராகன் சேட் கூறியுள்ளார். (இ-7)

## யுத்தம் வேண்டாம்
## ட்ரம்புக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கடும் மோதல்

(மணிலா)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மணிலாவில் நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்ற ஆர்ப்பாட்ட த்தில் கலகம் அடக்கும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கடும் மோதல் வெடித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய தலைவர்களின் மாநாடு இடம்பெறும் பிலிப்பைன்ஸ் சர்வதேச மாநாட்டு மண்டப த்தை நோக்கி பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களை கலகம் அடக்கும் பொலிஸார் தடுக்க முற்பட்ட போதே இந்த மோதல் ஏற்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக நீர்த்தாரை பிரயோ கம் மற்றும் தடியடி மேற்கொள்ளப் பட்டது.



பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை.

'யுத்தம் வேண்டாம். ட்ரம்ப் வேண் டாம். அமெரிக்க துருப்புக்களை ஆசியா விலிருந்து வெளியேற்று' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை கைகளில் ஏந்தியவாறு ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்ட பேரணியில் பங்கேற்றிருந்ததனர்.

மணிலாவில் நேற்று ஆரம்பமாகியுள்ள தென்கிழக்கு ஆசிய தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ட்ரம்ப் சென்றுள்ள நிலையில் இத்தகைய ஆர்ப்பாட்ட பேரணிகளால் சற்று பதற்றமான சூழ்நிலையே நிலவுகின்றமை குறி ப்பிடத்தக்கது. (இ-7)

## கிம் ஜாங் உன்னை குண்டன், குள்ளன் என்று நான் அழைக்கமாட்டேன்
### வடகொரிய ஜனாதிபதி குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



(வோஷிங்டன்)

முதியவர், பைத்தியகாரன் என்று தன்னை விமர்சித்த கிம் ஜாங் உன்-ஐ குண்டன் என்றும் குள்ளன் என்றும் நான் ஒருபோதும் அழைக்கமாட்டேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியா அணு ஆயுதங்களை சோதனை செய்வதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மேலும் இது அந்த நாடு மட்டுமல்லாமல் அண்டைய நாடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என்பதால் வடகொரிய ஜனாதிபதியின் செயலுக்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது.

இதனால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிற்கும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிற்கும் இடையே கடந்த சில மாதங்களாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இந்நிலையில் ஐ.நா. சபையின் கூட்டத் தொடரில் ட்ரம்ப் பேசும்போது, ஏவுகணை மனிதன் கிம் ஜாங் உன் ஆட்சிக்கு முடிவு கட்ட ஏவுகணைகளை சோதனை செய்து வருகிறார் என்று கூறியிருந்தார்.

இதற்கு பதிலடியாக அமெரிக்காவின் தலைவர் ஒரு வயதான முதியவர், குரைக்கும் நாய் கடிக்காது என்று கிம் ஜாங் தனது டுவிட்டரில் கூறினார். மேலும் வடகொரியாவிற்கு மிரட்டல் விடுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மனநலம் சரியில்லாதவர் என்றும் விமர்சித்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது



டுவிட்டரில் கூறியதாவது, "வடகொரிய ஜனாதிபதி தனது செயற்பாடுகளின் மூலம் தன்நாட்டு மக்களையே பட்டினி போட்டு கொன்று விடுவார். இதுதான் அந்த நாட்டில் நடக்கப்போகிறது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அவரை சோதிப்போம்", என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் டுவிட்டரில் கிம் ஜாங் உன்னை ட்ரம்ப் மீண்டும் விமர்சித்துள்ளார். அதில் தன்னை முதியவர் என்று கிம் கூறினாலும் நான் அவரை குள்ளன் மற்றும் குண்டன் என்று கூறமாட்டேன். அவருடன் நட்புறவு ஏற்பட முயற்சிப்பது மிகவும் கடினம். ஆனால் இது ஒரு நாள் ஈடேறும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (இ-7)

## ான்

கைதியாக
கூட்டணிக்
ம் அதனை
இராஜினா
றில்பு ல்லா
வுதி அரே
ப்பதாகவும்
ன் செல்ல
ர.
தலையிடு
ரினைக்குக்
டியுள்ளார்.
ஒன்றான
2016 ஆம்
ஆம் திகதி
ரியின் பத
டிசெம்பர்
ரான் ஆதிக்
ருக்கு அச்சு
ா இரகசிய
ம் தெரிவி
டந்த வாரம்
து. (இ-7)

## எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் சந்தித்த முக்கிய தலைவர்கள்

(மணிலா)

அமெரிக்கா- பிலிப்பைன்ஸ் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பில் இருநாட்டு தலைவர்களுக்கும் இடையில் கலந்து ரையாடப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா வில் இடம்பெறும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் ஒருபகுதியாக மேற்படி இருநாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட் கிழமை இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பானது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் போதை மருந்துக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்ற அழுத்தங்களுக்கு மத்தியில் ட்ரம் பின் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதிக்கு எதி ராக நேற்று மணிலாவில் பாரிய போராட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பரீட்சை திணைக்களத்தில் விரைவில் பல மாற்றங்கள்



## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சை திணைக்களத்தில் விரைவில் பல மாற்றங்களை கொண்டு வரவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியவில நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மத்தியில் இது தொடர்பில் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர், பரீட்சை திணைக்களத்தின் மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தின் இரகசியம் மற்றும் நிறுவகத்தின் பரீட்சை பிரிவின் பிரதம அதிகாரியாக செயற்பட்ட பிரதி பரீட்சைகள் ஆணையாளரை சேவையில் இருந்து இடை நிறுத்துவதற்கு சமீபத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுவர் சுகாதாரம் தொடர்பான சர்வதேச வைத்திய நிபுணர்கள் மாநாடு ஜனாதிபதி தலைமையில்

(கொழும்பு)

சிறுவர் சுகாதாரம் தொடர்பான சர்வதேச வைத்திய நிபுணர்கள் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை சிறுவர் நோய் விசேட வைத்தியர்கள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்ததாக நடைபெறும் இம்மாநாடு, நாளை மறுதினம் 15ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறுவதுடன், 42 நாடுகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட சிறுவர் நோய் விசேட வைத்திய நிபுணர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர் நோய் தொடர்பான சர்வதேச மட்டத்திலான அறிவை பகிர்ந்து கொள்வதற்கும், ஆய்வுகளை முன்வைக்கவும், தரங்களை அறிமுகப்படுத்தவும் இம் மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் சிறுவர் நோய் தொடர்பான மருத்துவ விஞ்ஞான நிறுவனம் இம் மாநாட்டிற்கான வசதியளிப்புகளை வழங்குகிறது.



சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, சிறுவர் சுகாதார, சிறுவர் நோய் தொடர்பான உலக காங்கிரஸ் தலைவர் வைத்தியர் மெனுவல் காட்ஸ், இலங்கை சிறுவர் நோய் தொடர்பான மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ, ஆசிய பசுபிக் சிறுவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத் தியர் இஸ்மாயில் துல்கிப்லி ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்தவின் கூட்டத்தில் நெரிசல் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் நேற்று முன்தினம் அநுராதபுரம் சல்காது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூட்ட நெரிசலில் சிக்கியமையினால் காயமடைந்தவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



பலர் மைதானத்திற்குள் நுழைய முடியாமல் மைதானத்தில் வெளியே நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பியசேன கமகேக்கு அமைச்சர் பதவி



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டதையடுத்து பியசேன கமகே அந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

விரைவில் அவருக்கு அமைச்சுப் பதவியொன்றை அரசாங்கம் வழங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தமக்கு இது வரையில் இது பற்றி அறிவிக்கப்படவில்லை என பியசேன கமகே தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாட்களில் தமக்கு அமைச்சுப் பதவியொன்று வழங்கப் படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை என்றாலும் அதனை பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பயண நேரம்; பயனுள்ள நேரம்!

எனக்குத் தெரிந்த ஒருவர் பதினைந்தாவது நிமிடத்திற்குள் சேர்ந்துவிடக் கூடிய ஒரு பஸ் பயண நேரத்திற்குள் ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிடுவார். சமயங்களில் இவர் நன்கு தூங்கிக்கடைசியாக ஒரு மணி நேரம் கழித்து அடையக் கூடிய பஸ் டெர்மினஸ் வரை போய் பின்னர் எழுந்து (எழுப்பப்பட்டு)மறு பஸ் பிடித்து வந்த கதையும் உண்டு.

பயணம் என்றால் தூங்குவது என்று சிலர் தீர்மானமாக இருக்கிறார்கள். இது தவறு.

இவர்கள் மேற்கூறிய என் நண்பரைப் போல, இறங்க வேண்டிய இடத்தையும் தங்கள் உடைமைகளையும் கோட்டை விடுவதோடு இன்னும் சில நல்ல விடயங்களையும் கோட்டை விட்டுவிடுகிறார்கள்.

பயண நேரத்தில் உடன் பயணிக்கும் நண்பர்கள், உறவினர்களுடன் மனம் விட்டுப் பேசலாம். முன்பின் அறியாத போதும் நன்கு பழகுகிற சக பயணிகளிடம் அவர்களது துறையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளலாம்.

இந்தந் சந்தர்ப்பத்திலில்லாமல் வீட்டிலோ தொழில் செய்யும் இடத்திலோ அமர்ந்தா பேசப் போகிறோம்? ஒருக்காலும் இல்லை.

ஜன்னலோரம் இடம் கிடைத்தது என்றால் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து இரசிக்கலாம். இந்த உலகில் எவ்வளவோ விடயங்கள் கொட்டிக் கிடக்கின்றன. கண் என்பது அறிவைச் சேர்க்கும் அற்புதக்கருவி. அதை மூடியே வைத்திருந்தால் அறிவுப் பகுதி இருட்டாகவே இருக்கும். இருள் வீட்டின் வாயில் அது. அதைத் திறந்தால் தான் வெளிச்சம் வரும்.

இதையெல்லாம் உணராமல் வாகனத்தில் ஏறி அமர்ந்தவுடன் கொர் கொர் என்று குறட்டை விட்டால் என்ன அர்த்தம்?

ரயிலாக இருந்தால் படிப்பதற்கு நிறைய எடுத்துக் கொள்ளலாம். (பஸ் என்றால் முடிந்த வரை படிக்க வேண்டாம் எனக் கண் மருத்துவர்கள் சொல்கிறார்கள்). இந்த வேகமான உலகில் படிப்பதற்கென்று ஆற அமரவா நேரம் ஒதுக்க முடிகிறது?

சிந்திப்பதற்கும் அருமையான நேரம் தான் இது.சினிமா பார்க்க மூன்று மணி நேரத்திற்கு மேல் தயக்கமில்லாமல் செலவிடுகிற நாம் வாழ்க்கையில் எடுக்க வேண்டிய ஒரு முக்கிய முடிவுக்குப் பத்து நிமிடம் கூட ஒதுக்குவது இல்லை. எப்பேர்ப்பட்ட தவறு- அல்லது முரண்பாடு!

மூளை என்பது ஒரு தீர்வுப் பெட்டி (Solution box) அதற்குள் ஒரு பிரச்சினையை ரயில் ஏறும் போது போட்டுவிட்டு பர்த்தில் ஏறிப் படுக்கும் வரை சிந்தித்துக் கொண்டே வந்தால் ரயிலை விட்டு இறங்கும் போது நல்ல தீர்வு கிடைக்கும்.

பல நீண்ட நாள் பிரச்சினை நாம் சிந்திக்கவே அஞ்சும் பிரச்சினைகளையெல்லாம் பயண நேரத்தில் குறித்துக் கொண்டு ஒவ்வொன்றாச் சிந்திக்கத் தொடங்கினால் அவற்றைப் பற்றிய தெளிவுடனும் தீர்மானத்துடனும் நாம் இறங்க முடியும்.

ஒரு காரியமாகப் போகிறோம் என்றால் யார் யாரைச் சந்திக்க வேண்டும், எப்படி எப்படிப் பேச வேண்டும், ஊர் திரும்பியதும் ஆக வேண்டிய வேலைகள் என்ன என்றெல்லாம் பயண நேரத்திலேயே முடிவு செய்துவிட வேண்டும். மாறாக செம்மையாகத் தூங்கி எழுந்து விட்டு ஊர் வந்தவுடன் என்ன செய்வது ஏது செய்வது என்று பேபே என விழிக்கக் கூடாது.

பயண நேரம் என்பது பயனுள்ள நேரம். அதை நம் வளர்ச்சிக்கு ஒதுக்க வேண்டுமே தவிர கும்பகர்ணனுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துவிடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு திணைக்களத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று திங்கட்கிழமை பாதுகாப்புத் திணைக்களத் தலைவர் ஆர். பாஸ்கரன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் இ. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

# அரசிற்கு எதிராகக் குரல் கொடுக்கும் எதிரணியின் வாயை பட்ஜெட் அடைக்கும்

## அமைச்சர் மனோ நம்பிக்கை



(கொழும்பு)

**எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அரசிற்கு எதிராகக் குரல் கொடுக்கும் எதிரணியின் வாயை அடைக்கும் என தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

ரம்பொட ஸ்ரீகஸ்கி மாணவர் சேவா அமைப்பு ஒழுங்கு செய்திருந்த இவ்வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ரம்பொட தொண்டமான் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொத்மலை மற்றும் உடபலாத்த பிரதேசங்களில் சித்தி பெற்ற மாணவ, மாணவிகள் பதக்கங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ், கல்வித்துறையை சேர்ந்தவர்கள், கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மனோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவு திட்டமானது இந்த நாட்டில் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக அமையும். இந்த வரவு-செலவு திட்டமானது மலையகம், வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு வாழ் மக்கள் தனித்து சொந்த வீடுகளில் வாழும் வாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளது.

சூழலுக்கு ஏற்ப தனி வீடுகள் அமைக்கப்பட்டு சுதந்திரமாக வாழக்கூடிய வசதி இந்த வரவு-செலவு திட்டத்தின் ஊடாக ஏற்படவுள்ளது. வரவு-செலவு திட்டத்தின் வாதப் பிரதிவாதங்கள் பாராளுமன்றத்தில் ஒரு மாத காலத்திற்கு இடம்பெறும். இதன்பின் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அபிவிருத்தி திட்டங்கள் இவர்களுக்கு கிட்டும். அந்த நிலையில் எங்களை எதிர்த்து பிரசாரம் செய்யும் எதிரணியின் வாய் அடைக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

சமீபத்தில் பாராளுமன்றத் திற்கு நடிகர்கள் வருகை தந்தார்கள். அதை மக்கள் கண்டிருப்பீர்கள். இந்த நடிகர்கள் தான் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு பாதகமாக செயற்படுபவர்கள். அரசியல் யாப்பு வரக்கூடாது என்பதை தெரிவித்தவர்கள் யார்?

இவர்கள் இந்த நாட்டில் பௌத்த மக்களுக்கு தனி ஒரு இடம் இல்லாமல் போய் விடும் என்று கூறிக்கொண்டே இந்த அரசியல்யாப்பை எதிர்த்து நின்றார்கள். வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல இவர்கள்.

நாங்கள் எடுப்பார் கைப்பிள்ளை போல் இருக்க மாட்டோம். முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தன காலத்தில் இருந்து நிலையான அரசியல் யாப்பு அனைத்து மக்களையும் காப்பாற்றக் கூடிய வகையில் அமைந்திராத சூழ்நிலையில் இந்த புதிய அரசியல் யாப்பு அனைத்து மக்களையும் காக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பது அனைத்து மக்களாலும் வரவேற்கத்தக்கக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சில தரப்பினர் குறுக்கு வழியில் அதிகாரத்தைப்பெற முயற்சி

### அமைச்சர் ரஞ்சித் காட்டம்




(கொழும்பு)

சில தரப்பினர் தமது பிரபல்யத்தை பயன்படுத்தி வேறு நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி செய்வதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி குறுக்கு வழியில் சிலர் அதிகாரத்தை கைப்பற்ற முனைவதாக புளத் கொஹுபிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் தொகுதியாளர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர் காட்டமாக கருத்து வெளியிட்டார். (இ-7)

## முதலில் விண்வெளிக்கு சென்று திரும்பிய பூனைக்கு சிலை



(பாரீஸ்)


முதன் முறையாக விண்வெளிக்கு சென்ற பெருமையை பெற்ற பூனைக்கு பிரான்ஸில் வெண்கல சிலை அமைக்கப்படவுள்ளது.

கடந்த 1963 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி 'வெரோனிக் ஏஜிஐ' என்ற ரொக்கெட் மூலம் பூனை ஒன்று விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. பூமியில் இருந்து 157 கிலோ மீற்றர் உயரத்துக்கு சென்ற பூனை 15 நிமிடத்துக்கு பிறகு பத்திரமாக பாராசூட் மூலம் உயிருடன் தரை இறங்கியது.

இதன் மூலம் முதன் முறையாக விண்வெளிக்கு சென்ற பூனை என்ற பெருமையை பெற்றது. இந்த பூனைக்கு பிரான்ஸில் வெண்கல சிலை அமைக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை லண்டனை சேர்ந்த மாத்யூ செர்ஜ் செய்து வருகிறார். (இ-7)

## பந்து இப்போது என் கையில்

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 25-31 ஆம் திகதிக்கு இடையில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் எனக்கு 80 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படும்.

பந்து இப்போது எனது கைக்கு வந்து விட்டது. சரியான நேரத்தில் நான் ஆட்டத்தை தொடங்குவேன்.

தேவையான ஏற்பாடுகள் தொடர்பாக, முடிவுகளை எடுப்பதற்காக தேர்தல் ஆணையம் எதிர்வரும் 17 ஆம் திகதி கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலி கொடுக்கப் போவதில்லை

## அமைச்சர் துமிந்த உறுதி



(கொழும்பு)

ஏனைய அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலி கொடுக்கப் போவதில்லை என்று அக் கட்சியின் பொதுச் செயலாளரும் கமத்தொழில் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கிஸையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரத்மலானை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுக் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் அரசாங்கத்திலுள்ள உண்மையான உரிமைக்காரர்கள் அல்ல. மாறாக எதிர்க்கட்சியில் மற்று மொரு கட்சியை ஆரம்பித்திருப்பவர்களே இவ்வாறான பிளவை ஏற்படுத்த முயல்வதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினார். (இ-7)

# ரூ.52 மில்.பெறுமதியான அலங்கு பட்டைகளுடன் மூவர் அகப்பட்டனர்

(கொழும்பு)

சுமார் 52 மில்லியன் ரூபாய் பெறுமதியான அலுங்கு என்ற அருகி வரும் விலங்கின் பட்டைகள் நான்கு உரப்பைகளில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்பிட்டி தில்லையடி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் அதனை கைப்பற்றியுள்ளனர்.

130 கிலோ கிராம் எடை கொண்ட இந்த அலுங்கு பட்டைகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சீனாவுக்கு அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ அலுங்கு பட்டை சுமார் 7 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய் யப்படுகிறது என கல்பிட்டி பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி லக்ஷ்மன் ரன்வல ஆராச்சி தெரிவித்துள்ளார். அலுங்கு பட்டைகளுடன் மூன்று சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒரு அலுங்கில் இருந்து 750 கிராம் பட்டைகளை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது. (இ-7)

# நால்வரின் உயிரைப் பறித்த கொஸ்கொட துப்பாக்கிச் சூடு

## பிரதான சந்தேகநபர் கைது

(கொழும்பு)

கொஸ்கொட - குருந் துகம்பியச, மெனிக்கம் மானய உள்ளிட்ட பிரதேசங்களுக்கு 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக முக்கிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் மனைவியால் சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் அடையாளம் காணப்பட்ட நிலையில், பொலிஸாரால் அவர் தேடப்பட்டு வந்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு 11.30மணியளவில் கட்டுவில பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த சந்தேக நபர் கொஸ்கொட நானதொட்ட பிரதேசத்தை சேர்ந்தவர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# இரட்டைப் படுகொலையாளிக்கு ஆதரவாக யாரும் ஆஜராக வேண்டாம்

## மக்கள் போராட்டம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடிக் கிராமத்தில் கடந்த 18.10.2017 அன்று இடம்பெற்ற இளம் தாய் மற்றும் மகன் இரட்டைப் படுகொலையாளிகளுக்கு ஆதரவாக யாரும் ஆஜராக வேண்டாமெனக் கோரி,கிராம மக்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியருகே ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் சவுக்கடி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மயிலம்பாவெளி, தன்னாமுனை உள்ளிட்ட அயற் கிராமங்களிலுள்ள பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

"இந்த இரட்டைப் படுகொலையில் பொலிஸாரும் விசேட புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து கொலைகாரர்களை மிகவும் கஷ்டப்பட்டு பிடித்தார்கள். அவர்களது பணியை மிகவும் சிறப்பாகச் செய்துள்ளனர்.

ஆனால், குற்றவாளிகளைக் காப்பாற்றும் வகையில் ஒரு சில சட்டத்தரணிகள் முயல்வது மிகவும் கவலைக்குரியது" என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

கொலைகாரர்களுக்குச் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகக் கூடாது. அதேவேளை, கொலையாளிகளுக்கு அதிகூடிய தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

அமைதியான முறையில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தின்போது, பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இப்படுகொலையின் பிரதான இரு சந்தேகநபர்கள், படுகொலை இடம்பெற்ற வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டு, நாளை மறுதினம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாதியை மாற்றக்கோரி

## வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

லிந்துலை வைத்தியசாலை வைத்தியர்கள் உட்பட அங்கு பணிபுரியும் அதிகாரிகள் நேற்று காலை முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நிர்வாகத்திற்கு இடையூறு விளைவிக்கும் தாதியர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கக் கோரி இப்பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும் சில தாதியர்கள் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் பிரபாஸ் கருநாயக்க கருத்து தெரிவிக்கையில், லிந்துலை வைத்தியசாலையில் பணிபுரிந்த தாதியர் ஒருவர் நிர்வாகத்திற்கு தொடர்ந்து இடையூறை ஏற்படுத்தி வந்ததுடன் கடமையை சரிவர செய்யாமலிருந்தமையினால் அவரை கொட்டகலை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்தோம். அந்த இடமாற்றத்தை இரத்து செய்துகொண்டு மீண்டும் லிந்துலை வைத்தியசாலைக்கு கடமைக்கு வந்துள்ளார். இவ்வாறானவர்கள் இந்த வைத்தியசாலையில் இருக்கும் பட்சத்தில் எமது கடமையை திறம்பட செய்ய முடியாது என்பதுடன் வரும் நோயாளர்களுக்கு சிறந்த சேவையையும் வழங்க முடியாது. எனவே குறித்த தாதி வைத்தியசாலையை விட்டு இடமாற்றம் பெற்று செல்லும் வரை பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடபோவதாக தெரிவித்தார். (இ-7)

# அடுத்த ஆண்டில் ஒவ்வொரு பிரஜைகளும் ஒரு இலட்சம் ரூபா கடனாளிகளாக இருப்பர்

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு)

அடுத்த ஆண்டில் ஒவ்வொரு பிரஜைகளும் ஒரு இலட்சம் ரூபா கடனாளிகளாக இருப்பார்கள் என பாரிய நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வரவு- செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் மொத்தத் தொகையை இம்முறை வரவு- செலவுத்திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு கட்டுப் படுத்துவதற்கு முடிந்துள்ளது. இதன்மூலம் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் வரி மூலமான வருமானம் ஆயிரத்து 50 பில்லியன் ரூபாவாகும். 2018ஆம் ஆண்டில் இத்தொகையை இரண்டாயிரத்து 34 பில்லியனாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக வரி மூலமான வருமானத்தை மூன்று மடங்காக அதிகரிக்க முடிந்துள்ளது. அடுத்த வருடம் அரசாங்கம் பெரும் சிரமம் மிக்க நிலையை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இதன்மூலம்அடுத்த வருடத்தில் ஒவ்வொரு பிரஜையும் ஒரு இலட்சம் ரூபா கடனாளிகளாக இருப்பார்கள். இதில் 85 ஆயிரம் ரூபா மகிந்த ராஜபக்ஷ யுகத்தில் பெறப்பட்ட கடனாகும்" என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பரல்லா-Ambrella



குடும்பம் ` - **Anacardiaceae**
தாவரவியற் பெயர் - **Spondiasduicis**
பொதுப்பெயர்- **Golden apple,** அம்பரல்லா

வெவ்வேறான நாடுகளிலும் வெவ்வேறான பெயர்களால் அழைக்கப்படும் அம்பரல்லா ஆனது நன்கு நீர் வடிப்புள்ள 80% - 100% சூரிய ஒளியில் எல்லா மண் வகை உள்ள நிலங்களிலும் வளரக்கூடிய தன்மை கொண்டது. இதனை Golden apple, Juneplum எனவும் அழைக்கப்படுகிறது. இயற்கையான அதாவது சாதாரண மண் PH லும் (5.5 - 6.5) 22°C - 27°C வெப்ப நிலையிலும் வளரும் தன்மை கொண்டது. இதில் காணப்படும் நார்த்தன்மையும் தசைப் பகுதியும் அன்னாசி, மாங்காயின் சுவையை ஒத்ததாக காணப்படுகின்றது. இத்தாவரத்தின் காய் மற்றும் இலைகள் பொதுவாக உண்ணப்படும் பகுதியாக காணப்படுகின்றது. முற்றியகாயில் அதிகளவான விற்றமின் C காணப்படுகின்றது. நீரிழிவு நோயாளர்களுக்கு சீனித் தன்மையைக் குறைக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது.

தாவரத்தின் குருத்துப் பகுதி இலைகளே உண்ணப்படுகிறது. குருத்து இலைகளை சம்பல் செய்தும் காய்களை கறி சமைத்தும் உண்ணலாம்.

பொதுவாக தாவரமானது 12m-15m வரை உயரமாக வளரும் சிறிய வெள்ளை நிறப் பூக்களைக்கொண்டது. ஆண்பூ பெண் பூ என்பன சேர்ந்து ஒன்றாகக் காணப்படும்.

இத் தாவரத்தில் இருந்து பொதுவாக 4-5 வருடங்கள் வரை அறுவடையைப் பெறலாம். பொதுவாக விதை மூலமாகவே இனப்பெருக்கமடையக் கூடியது. நான்கு வருடமுடைய தாய்த் தாவரத்திலிருந்தே விதைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

100g அம்பரல்லங்காயில் 157 கலோரி சக்தியும் 15.5g காபோவைதரேற்றும் 8g சீனியும் 1g புரதமும் 1% விற்றமின் Aயும் 85% விற்றமின் Cயும் 2% கல்சியமும் 2% அயனும் உள்ளடக்கப்படுகிறது. இதில் கொலஸ்ரோல் அற்றது. இதன் தாய் நாடு மிலனேசியா ஆகும்.

இதன் நன்மைகள்

- இதயம் தொடர்பான நோய்களை தடுக்கும்.
- கண்களின் பாதுகாப்புக்கு உதவும்.
- கொலஸ்ரோல் மட்டத்தை கட்டுப்படுத்தும்.
- Antioxidente கொண்டது.
- குருதியிலுள்ள செங்குருதி சிறு துணிக்கையின் எண்ணிக்கையை அதிகரிக்கும்
- உடலிலுள்ள இழையங்களை பாதுகாக்கும்.
- காயிலுள்ள பொஸ்பரஸ் எலும்புகளையும் பற்களையும் பாதுகாக்கும்.

இத்தகைய சிறப்புமிக்க மரத்தினை வீடுகளில் நடுகை செய்து அனைவரும் பயன் பெறுவோம்.

செல்வி சிவகுமாரன் பிந்துஜா
ஒலுமடு விவசாயப் போதனாசிரியர்,
பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம், முல்லைத்தீவு.

# பியருக்கான வரி குறைப்பு ஜனாதிபதி கடும் அதிருப்தி



(கொழும்பு)

பியர் வகைகளுக்கான வரி குறைக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஒரு லீற்றர் பியருக்கான வரி 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு ஜனாதிபதியும் சில அமைச்சர்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.


வரி குறைப்பு தொடர்பில் அமைச்சரவையில் கடுமையான விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

குறிப்பாக சம்பிக்க ரணவக்க மற்றும் ராஜித சேனாரட்ன ஆகிய அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத மதுபான பயன்பாட்டை தடுக்கவே இவ்வாறு வரி குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த வாதத்தை அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என அமைச்சரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# வாகன இறக்குமதியாளர்களின் நடவடிக்கையால் அரசிற்கு நட்டம்



(கொழும்பு)

வாகன இறக்குமதியாளர்களின் நடவடிக்கையால் அரசாங்கத்திற்கு பாரியளவு நட்டம் ஏற்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

அதி சொகுசு வாகனங்கள் பயன்படுத்திய வாகனங்கள் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்படுவதனால் இவ்வாறு பாரியளவில் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு இவ்வாறான நட்டங்கள் ஏற்படுவதனை தடுக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1249

Search for people, places and things Nagendram Home

**அகில்ராஜ்**




**யுஸ்ரினா**





**வேக்மன்**





**சுலைக்ஷனா**




**வில்மன்**





**டிலைக்ஷனா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐ.தே.கவுடன் எவ்வித டீலும் கிடையாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் எவ்வித டீலும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சி அல்லது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் எவ்வித தொடர்பும் கிடையாது என சுட்டிக்காட்டியுள்ள அவர் இரவு விழுந்த குழியில் பகலிலும் விழத் தயாரில்லை எனவும் அரசாங்கத்திற்கு நல்லதொரு பாடத்தை கற்பிக்கும் பொறுப்பு மக்களைச் சாரும் எனவும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டைப் பிளவடையச் செய்யும் வகையில் அரசியல் சாசனம் உருவாக்கப்படுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

# பெற்றோல் நெருக்கடி நிலைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன

## அமைச்சர் சரத் அமுனுகம தகவல்



(கொழும்பு)

பெற்றோல் தொடர்பில் சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலைக்கு காரணமான விடயங்களை கண்டறிவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு தனது அறிக்கையை தயாரித்துள்ளது.

கண்டியில் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் உபகுழு அங்கத்தவர்களுக்கான தலைவரும் விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இன்னும் இரண்டொரு தினங்களில் பெற்றோலுக்கான நெருக்கடி எதுவுமில்லை.

டீசலுக்கான நெருக்கடி இருக்கவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட பெற்றோல் நெருக்கடி நிலைக்கு காரணம் என்ன என்பதை கண்டறியவே நாம் முயற்சிக்கின்றோம். இதனை கண்டறிந்து ஜனாதிபதியிடம் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளோம் என்றார்.

மேலும், உண்மையான விடயங்களை மறைக்க முடியாது. இந்த அறிக்கை பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பூரணப்படுத்தி வெளியிடும் முன்னர் இது தொடர்பில் குறிப்பிடுவது முறையல்ல என்றும் நெருக்கடிக்கான காரணங்கள் அனைத்தையும் கண்டறிந்துள்ளோம். இதனை ஆழமாக ஆராய்ந்து அறிக்கையினை தயாரித்துள்ளோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரசன்ன உள்ளிட்ட 31பேருக்கு பிணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர, மாகாண சபை உறுப்பினர்களான உபாலி கொடிகார உள்ளிட்ட 31 பேரும் நேற்று பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மத்தள விமான நிலையத்தை நீண்டகாலம் குத்தகை அடிப்படையில் இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நீதிமன்றத் தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்காக இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய யார் காரணம்

## ரவி கருணாநாயக்க விளக்கம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு யார் காரணம் என்பதனை முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விளக்கியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சி அடைவதற்கு மத்திய வங்கியின் சில அதிகாரிகளே காரணம் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மத்திய வங்கியின் சில அதிகாரிகளின் செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)



உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்கில் மாணவர்களுக்கான சந்தை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

(படங்கள்:-கரணவாய், பொற்பதி செய்தியாளர்)

# மீன்வரத்து அதிகரிப்பு



(பொற்பதி)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையால் வடமராட்சிக் கிழக்கு அபாய வெளியேற்றுப் பாலப் பகுதியில் மீன்களின் வரத்து அதிகரித்துள்ளமையால் மீன்பிடி நடவடிக்கையில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். (இ-10-64)

# மங்களவுக்கு பிரதமர் ஆசையை ஊட்டுகிறது ஸ்ரீ.சுதந்திரக்கட்சி



(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவை பிரதமராக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-7)

# ஈரான் மற்றும் ஈராக் எல்லையில் உயிரிழந்த மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரி அனுதாபம்

(கொழும்பு)

ஈரான் மற்றும் ஈராக் எல்லைப் பிராந்தியங்களில் ஏற்பட்ட பூமியதிர்வால் உயிரிழந்த மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

"ஈரான், ஈராக் எல்லைப் பிரதேசங்களில் ஏற்பட்ட பூமியதிர்வால் உயிரிழந்த மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் இயல்பு நிலைக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் ஜனாதிபதி தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

Maithripala Sirisena
@MaithripalaS

My deepest condolences and sympathies to the victims of the earthquake that struck the border region between Iraq and Iran. Hope the people will overcome the calamity with their spirit of resilience.

11:49 AM - Nov 13, 2017

இந்த பூமியதிர்வால் 250 பேர் பலியானதுடன், சுமார் 2 ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மக்கள் போராட்டம் தொடர்கிறது



(யாழ்ப்பாணம்)

அக்கரை கடற்கரையில் இருக்கும் சுற்றுலா மையத்தை அகற்றி அதைச் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றம் செய்யுமாறு கோரி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் 56 நாட்களைக் கடந்து தொடர் கவனயீர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-9)

# புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் மதகுருமார்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளிக்கப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியல் அமைப்பு விடயத்தில் தமிழ் மக்கள் சார்பாக மதகுருக்களின் கருத்துக்கள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் எமது இளைஞர்கள் சொந்த மண்ணுக்காக போராடி இன்று நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளார்கள். எமக்கென இருந்த தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மட்டு மே. அவர் இன்று உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. போரை முடிவுக்குக் கொண்டு வந்த கடந்த கால அரசு அவர் உயிருடன் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மரணச் சான்றிதழ் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அதை அவர்கள செய்யவில்லை. அரசியல் அமைப்பு தொடர்பாக பேசப்பட்டு வருகிறது. தீர்வு திட்ட த்துக்கு சரியான முடிவை எடுப்பதற்காக தற்போதைய தலைவர்கள் முன்வந்துள்ளார்கள். வடக்கு-கிழக்கு இணைய வேண்டும் என்பது எமது அடிப்படை கொள்கை. வடக்கு- கிழக்கை பிரிக்க நினைப்பவர்கள்தமிழருடைய வலியை உணராதவர்கள். இழந்தவர்களுக்குதான் வலிகள் புரியும். எனவே வடக்கு- கிழக்கை பிரிய விடமாட்டோம். அதை இணைத்து தீர்வை வழங்க வேண்டும்.

மேலும் வடக்கு-கிழக்கில் பெண்கள் பாராளுமன்றம் செல்வது குறைவாகவுள்ளது. இது அதிகரிக்கப்படவேண்டும். அரசியல் அமைப்பு மாற்றம் செய்வதில் முக்கியமாக இங்குள்ள மத குருக்களின் பங்களிப்புடன் அமைக்க வேண்டும். தெற்கில் அரசியல் அமைப்பை தேரர்கள் நிர்ணயிக்கிறர்கள் அவர்களுக்கு தான் அங்குள்ளவர்கள் மதிப்பளிக்கிறார்கள். எனவே எமது மத குருக்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம்

யாழ்.மாவட்டத்திற்கு 45 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். இவர்களிற்கான 'நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை 15.11. 2017ஆம் திகதி காலை 9 மணிக்கு சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், யாழ். மாவட்டத்திலிருந்து நியமனம் பெறுபவர்களின் பெயர் விபரங்கள் யாழ்.மாவட்ட சமுர்த்திஅபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் க.மகேஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ளது.

ஏ.சதீஸ்-891491859V, வாதரவத்தை, புத்தூர், எஸ். ஜசிந்தன்-913413385V, டச்வீதி, மானிப்பாய், ரி.நவேந்தன்- 910963252V, பிள்ளையார் கோவில் அருகில், அச்சுவேலி தெற்கு (அச்சுவேலி), எஸ்.ஜெசாலினி-897911566V, மணல் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, ஆர். சிவாஜினி- 925200114V, 456, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, கே.தனேஸ்வரன்--881002949V, இடைக்குறிச்சிகிழக்கு, வரணி, எஸ் நிருபாகரன்-811655945V, 26/16, அராலி வீதி, ஓட்டுமடம், கே.கஸீபன்-931421166V, மந்தாவில் கிழக்கு, கொடிகாமம், எம்.சுரேஸ்கரன்-910492560V, பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி, ஆர்.கோகிலா-876692589V, பாடசாலை வீதி, ஆழியவளை, தாழையடி. எஸ். செல்வசுஜந்தன் -893360425V, ஆஸ்பத்திரி வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், எம்.சலுஜா-867424130V, AGA ஒழுங்கை வல்வெட்டித்துறை, வீ.ஜனார்த்தனன்-902462120V, 106, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, 'கொக்குவில், எஸ்.காயத்திரி- 897252643V, யாமசுந்தி உடுவில்தெற்கு, மானிப்பாய், கே.நிறோஜினி-935450730V, முருகமூர்த்தி கோவிலடி, நவாலி கிழக்கு, மானிப்பாய், எஸ். கிருத்திகா-908322843V, குணம்ஸ்ரோர், தவசிக்குளம், மிருசுவில் கொடிகாமம், எல்.ஆருரன்-922043221V, 58, மணிக்கூட்டுக்கோபுர வீதி , நீராவியடி, யு.உஷானா--935311128V, நிச்சாமம், சங்கானை, எஸ்.கணேசமூர்த்தி-912563111V, வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறை, ஆர்.இலங்கேஸ்-900084536V, கொடுக்குளை வீதி, ஆழியவளை, தாழையடி, ரிகல்யாணி-907513033V, காரைக்கால் சிவன் கோயில் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில், எஸ். நிதர்சன்-933260968V, துன்னாலைதெற்கு, கரவெட்டி, ஏ.ரி.நேருஜினி-928012638V, வட்டாரம் 10, நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு, ரி.மயூரதன்-880040723V, வட்டாரம் 7, வேலணை மேற்கு, வேலணை, ஆர்.கோபிதாஸ்-930812374V, நீர்வேலி மேற்கு, நீர்வேலி, எம்.எம்.தர்மிகா-917393419V, முகாம் வீதி, ஊறணிவற்றுறை, ரி.அகில்-911354128V, எஸ்.சி.சி. உரும்பிராய் வடக்கு, உரும்பிராய், கே.சதீஸ்-872890211V, மாவிலங்காயடி, அல்லவாய் வடமத்தி, அல்வாய், எஸ். தேவரூபன்-882432394V, சோதியம்மன் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை , ஏ.எல்.ஜக்குலின்-916224419V, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், எம்.ஜே.ஜே.திஷான்-930270407V, புனித செபஸ்ரியார் வீதி, சில்லாலை பண்டத்தரிப்பு, ஏ.அனுதர்ஷினி-877312437V, குமரக்கோட்டம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், கே. வளர்மதி-915730973V, மித்திரிகரை, புன்னாலை மேற்கு, கரவெட்டி, ரி.விஜயராஜ்-921363710V, சமாதி கோவிலடி வடக்கு, ஏழாலை, என்.சஹானா-946553650V, சபாபதிபிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு, பி.ஐ. சுவர்ணா-907003019V, பிரதான வீதி, மாதகல், எஸ்.எக்ஷானா-915861687V, வட்டாரம் 7, புங்குடுதீவு, ஏ.மயூரன்-861003639V, நாகம்மாள் கோவிலடி, உடுவில் கிழக்கு சுன்னாகம், ஆர்.விஜிதா -907462323V, தாழங்குடா வீதி, மீசாலை வடக்கு கொடிகாமம், என்.நிஷாந்தினி-958380852V, நம்பிதாவத்தை பொலிகண்டி மேற்கு வல்வெட்டித்துறை, எஸ்.அருண்குமார்-911353156V, 3 கிராண்ட் பஷார் மன்னார், ஆர். ரதனா-198352010020, ஆறுமுகம் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி, ஏ.ரோசிகா-897482614V, பொன்ன தோட்டம் பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித் துறை, வீ.தேவகி-868122013V, வறாத்துப்பளை புலோலி வட.கிழக்கு பருத்தித்துறை, ஜே. யோகேஸ்வரி-838614612V, 231 புதிய புன்னை நீராவி, விஸ்வமடு, கிளிநொச்சி (இ)

# மதுபானசாலைகளுக்கு எதிராகக் கவனயீர்ப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட் டத்தில் மதுபானசாலைகளைக் குறைக்கக் கோரியும் ஆரையம்பதியிலுள்ள மதுபானசாலைகளை அகற்றக் கோரியும் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று, நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் மற்றும் மகளிர் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், ஆரையம்பதி பிரதேச பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

யுத்தத்துக்குப் பின்னர் மட்டக்களப்பில் அதிகளவான மதுபானசாலைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவற்றை மட்டுப்படுத்த உயர் அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென, இக்கவனயீர்ப்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆரையம்பதியில் இரண்டு மதுபானசாலைகள் சட்டவிரோதமான முறையில் இயங்கிவருவதாகவும் அதற்கு எதிராக 2015ஆம் ஆண்டிலிருந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகையில், அதனையும் மீறி சில அதிகாரிகளின் அனுசரணையுடன் அந்த மதுபானசாலைகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாகவும் குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

2018ஆம் ஆண்டு, குறித்த மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்படக்கூடாது என இங்கு தெரிவிக்கப்பட்டதுடன், அதனை மீறி அனுமதி வழங் கப்பட்டால், தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப் படும்எனவும் தெரிவிக்கப்பட்டது.

மதுபாவனைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுவருவதுடன், வறுமை நிலை, குடும்ப வன்முறைகளும் அதிகரித்துள்ளதெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கவனயீர்ப்பைத் தொடர்ந்து மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயத்திடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

ஆரையம்பதியில் இயங்கிவரும் மதுபான விற்பனை நிலையம் தொடர்பில், இலங்கை மதுவரித்திணைக்கள உயர் அதிகாரிகள், மண் முனைப்பற்று பிரதேச செயல கத்துக்கு, நேற்று வருகை தந்து விசாரணைகளை மேற் கொண்டுள்ள நிலையி லேயே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

# புத்தர்சிலை பதிக்கப்பட்ட பட்டாசுகள் மீட்கப்பட்டன



(கொழும்பு)

வெல்லவாய, புதுருவாகல பிரதேசத்தில் புத்தரின் உரு வச்சிலை பதிக்கப்பட்ட ஒரு தொகை பட்டாசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அப்பிரதேசவாசி யொருவரினால் விலைகொடுத்து வாங் கப்பட்ட பட்டாசு பெட்டியொன் றில் இந்த புத்தர் சிலை பதிக் கப்பட்டபட்டாசுகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அரசு கூடுதல் கவனம்-ருவான்

(கொழும்பு)

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏற்ற வகையிலேயே முன்மொழிவுகள் வரவு-செலவுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக மல்வான பிரதேசத்தில நேற்று ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டு மக்கள் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் நன்கு அறிவர். யார் எந்தவகைய குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போதிலும் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் சமகால அரசாங்கம் கூடுதலான கவனம் செலுத்தியிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எவருக்கும் எத்தகைய தடையையும் ஏற்படுத்த நாம் இடமளிக்கப்போவதில்லை. கல்விக்குப்போன்றே இளைஞர் சேவைகள் மேம்பாட்டுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆழமாக ஆராய்ந்தே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் வழமை போன்றே வரவு-செலவுத் திட்டத்தை விமர்சிக்கின்றனர்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் விமர்சனங்களையே மேற் கொள்கின்றனர். இவை காத்திரமான விமர்சனங்கள் அல்ல என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# சத்தியம் தவறாத மன்னன்

ஒரு முறை தேவலோகத்தில் வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் பெரும் வாக்குவாதம் நடந்தது. பொய் சொல்லாத மானிடரும் உண்டு என்று வசிஷ்டர் கூற "பொய் பேசாத மனிதர்களே இருக்கமாட்டார்கள். மனிதனாய்ப் பிறந்த அனைவரும் பொய் பேசியே தீருவார்கள்" என வாதிட்டார் விசுவாமித்திரர்.

"அப்படியானால் பூவுலகில் அயோத்தியில் மன்னனாக உள்ள அரிச்சந்திரனை ஒரு பொய் சொல்ல வைத்து விடுங்கள். உங்களிடம் நான் தோற்றதாக ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறினார் வசிஷ்டர்.

"அப்படியே. அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைக்கிறேன். வருகிறேன்" என்று கூறிய விசுவாமித்திரர் கோபமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.


பூலோகம் வந்தவர் நேராக அயோத்தி மன்னனை நாடிச் சென்றார். அவரது அறிவு சிந்திக்கத் தொடங்கியது. ஏதாவது சிக்கலில் இந்த அரசனை சிக்கவைத்துப் பின்னர்தான் பொய் சொல்ல வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அரண்மனையில் நுழைந்த மகரிஷியை மரியாதையுடன் வரவேற்றான் மன்னன் அரிச்சந்திரன். அவனை வாழ்த்திய விசுவாமித்திரர் "அரிச்சந்திரா! நான் செய்யும் யாகத்திற்கு சிறிது பொருள் தேவைப்படுகிறது அதனால் உன்னை நாடி வந்துள்ளேன்" என்றார்.

மிகவும் மகிழ்ந்த அரிச்சந்திரன் ஆயிரம் பொற்காசுகளை அளித்தான். அதைப் பெற்றுக் கொண்ட விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி."மன்னா, இந்தப் பொற்காசுகள் உன்னிடமே இருக்கட்டும். தேவையானபோது வந்து பெற்றுக் கொள்கிறேன்." என்று கூறிவிட்டு அரண்மனையை விட்டு வெளியேறினார்.

நாட்கள் கடந்தன. விசுவாமித்திரர் மீண்டும் அரிச்சந்திரனை நாடிச் சென்றார். வழக்கம் போல மன்னன் அவருக்கு வரவேற்பு அளித்து அமரச் செய்தான். பின் அன்புடன் கேட்டான்."சுவாமி, நான் செய்யும் காரியம் ஏதேனும் உள்ளதா சுவாமி?"

"அரிச்சந்திரா, நீ சொன்ன சொல் தவறாதவன் என்றும் சத்தியமே பேசுபவன் என்றும் அறிந்தேன். நேற்று என் கனவில் உன் நாட்டை எனக்குத் தானமாகக்



கொடுப்பது போல் கனவு கண்டேன்.அப்படி நடக்குமா என்ன!"

கள்ளச் சிரிப்பைத் தன் இதழ்களில் நெளிய விட்டபடி கேட்டார் விசுவாமித்திரர்.

"முனி சிரேஷ்டரே, கனவிலே சொன்னால் என்ன நனவிலே சொன்னால்தான் என்ன? சொன்னது சொன்னதுதான்.

என் நாட்டைத் தங்களுக்குத் தானமாக இப்போதே தருகிறேன்."

மகிழ்ச்சியுடன் கூறிய அரிச்சந்திரன் உடனே தன் நாட்டை முனிவருக்குத் தானமாக தாரை வார்த்துக் கொடுத்தான்.

அடுத்த சில நிமிடங்களில் தன் மனைவி சந்திரமதி, மகன் லோகிதாசன் சகிதம் அரண்மனையை விட்டுப் புறப்பட்டான்.

அதைக் கண்ட விசுவாமித்திரர், "நில் அரிச்சந்திரா, என் ஆயிரம் பொற்காசுகளைத் தந்து விட்டுப் போ."

"சுவாமி அந்தப் பணமும் அரண்மனை கருவூலத்தில் தான் உள்ளது".

"அது நீ மன்னனாக இருக்கும் போது. இப்போது அனைத்துச் செல்வங்களையும் தானமாகத் தந்து விட்டாய். இப்போது அவை எனக்குச் சொந்தம்.எனவே நீ தரவேண்டிய ஆயிரம் பொற்காசுகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?"

அரிச்சந்திரன் என்ன பதில் கூறுவான்! தலை குனிந்து நின்றான். அப்போது முனிவர் மெதுவாக அவன் அருகில் வந்தார்". அரிச்சந்திரா. நான் ஆயிரம் பொற்காசுகளை உன்னிடம் தரவே இல்லை என ஒரு பொய் சொல்லிவிடு உன் நாட்டையே நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்". அரிச்சந்திரன் திடுக்கிட்டான். பொய் சொல்வதா! அது என்னால் இயலாது என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு நடந்தான். விசுவாமித்திரர் விடவில்லை". என் ஆயிரம் பொற்காசுகளுக்குப் பதில் சொல்லிவிட்டுப்போ" என்றார். தான் சம்பாதித்துத் தருவதாகக் கூறிய மன்னன் ஒரு சீடனைத் தன்னுடன் அனுப்பும்படி கூறி அவனையும் அழைத்துக்கொண்டு அரண்மனையை விட்டுப் புறப்பட்டான்.

காட்டில் அலைந்து திரிந்த அரச குடும்பத்தினர் தங்கள் பசியைத் தாங்கிக் கொண்டு தங்களுடன் வந்த சீடனின் பசியைப் போக்கப் பாடுபட்டனர்.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2017 14

❖1885- செர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.

❖1922- பிபிசி தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் தொடக்கியது.

❖1940-இரண்டாம் உலகப் போர்: இங்கிலாந்தில் கவென்ட்ரி நகரம் ஜேர்மனியரின் குண்டு வீச்சில் பலத்த சேதமடைந்தது. கவென்ட்ரி தேவாலயம் முற்றாக அழிந்தது.

❖1956- ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.

❖1969-அப்பலோ திட்டம்: அப்பலோ 12 விண் கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.

❖1975-மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.

❖1996- டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

❖2001-ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

பிறப்புகள்

❖1765- ராபர்ட் ஃபுல்டன், நீராவிக் கப்பலைக் கண்டு பிடித்த அமெரிக்கப்பொறியியலாளர் (இ. 1815)

❖1840- கிளாட் மோனெ, பிரெஞ்சு ஓவியர் (இ. 1926)

❖1889- ஜவகர்லால் நேரு, இந்தியாவின் முதலாவது பிரதமர் (இ. 1964)

❖1907- ஆஸ்ட்ரிட் லிண்ட்கிரென், சுவீடிய எழுத்தாளர் (இ. 2002)

❖1926- பிலு மோடி, இந்திய அரசியல்வாதி (இ. 1983)

❖1930- எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ. 1967)

❖1931 - இரா. பெருமாள் ராசு, இந்தியக் கவிஞர்

❖1947- பி. ஜெ. ஓரூக், அமெரிக்க ஊடகவியலாளர்

❖1948- சார்லசு, வேல்சு இளவரசர்

❖1954- கொண்டலீசா ரைஸ், அமெரிக்க அரசியல்வாதி

❖1971- அடம் கில்கிறிஸ்ற், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

❖1972- ஜோஷ் டுஹாமெல், அமெரிக்க நடிகர்

இறப்புகள்

❖565- முதலாம் ஜஸ்டினியன், பைசாந்தியப் பேரரசர் (பி. 482)

❖683- முதலாம் யசீத், உமையா கலீபா (பி. 647)

❖1263- அலெக்சாந்தர் நெவ்ஸ்கி, ரஷ்யப் புனிதர் (பி. 1220)

❖1716- கோட்பிரீட் லைப்னிட்ஸ், செருமானியக் கணிதவியலாளர் (பி. 1646)

❖1831- எகல், செருமானிய மெய்யியலாளர் (பி. 1770)

❖1977- பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா, கிருஷ்ண பக்திக் கழக நிறுவநர் (பி. 1896)

❖1987- ஏ. எல். அப்துல் மஜீத், கிழக்கிலங்கை அரசியல்வாதி (பி. 1933)

❖2013- ஓம் முத்துமாரி, தமிழகக் கிராமியக் கூத்துக் கலைஞர்

❖2015- கே. எஸ். கோபாலகிருஷ்ணன், தென்னிந்திய திரைப்பட இயக்குநர் (பி. 1929)

சிறப்பு நாள்

❖உலக நீரிழிவு நாள்

❖குழந்தைகள் நாள் (இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 170 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 95 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 800 | 550 | 420 | 540 | 500 | 600 |
| தக்காளி | 250 | 130 | 100 | 120 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 20 | 25 | 70 | 50 | 60 |
| கோவா | 140 | 150 | 80 | 120 | 140 | 150 |
| கரட் | 100 | 150 | 80 | 120 | 240 | 120 |
| பூசணி | 50 | 100 | 60 | 70 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 70 | 70 | 100 | 100 |
| வாழைக்காய் | 70 | 100 | 80 | 80 | 120 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 260 | 300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 110 | 140 | 120 | 120 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 240 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 70 | 100 | 70 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 320 | 100 | 150 | 180 | 240 | 250 |
| லீக்ஸ் | 200 | 300 | 120 | 200 | 240 | 150 |
| பீற்றூட் | 100 | 150 | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 220 | 250 | 100 | 320 | 300 |
| முருங்கைக்காய் | 700 | 100 | 150 | 320 | 120 | 300 |
| போஞ்சி | 200 | 160 | 100 | 100 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 100 | 180 | 160 | 180 |
| கீரை - பிடி | 40 | 20 | 30 | - | 40 | 60 |
| தேசிக்காய் | 160 | 50 | 150 | 80 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 70 | 80 | 60-100 | 90 |
| இராசவள்ளி | - | - | 250 | 75 | - | - |
| வெங்காயப்பூ | - | - | 200 | - | 240 | - |
| முள்ளங்கி | 70 | 100 | 30 | 280 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | 80 | 40 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 15 | 50 | 20 | 15 |
| அப்பலா | 80 | 100 | 28 | - | 80 | 80 |

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்கட்டும்!

– கிரீஸ் நாட்டு பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ‘தா’ க்குறைக்கு என் செய்வேன்

சித்தர்கள், யோகிகள், ஞானிகள் பாடிய பாடல்கள் மனித வாழ்வின் தத்துவத்தை விபரிப்பவை.

இதில் பட்டினத்தடிகள் பாடிய பாடல்கள் இவ்வுலகப் பற்றை நீக்கி பேரின்பத்தைப் பெற்றுய்வதற்கானது.

*“அந்தமும் வாழ்வும் அகத்து மட்டே...”* என்ற பாடலை படிப்பவர்கள் மனித வாழ்வின் ஆதியையும் அந்தத்தையும் அதில் கண்டு கொள்வர்.

இப்படியாக மிகப்பெரும் மகான்கள் மனித வாழ்வை வெறுத்து பிறவாப் பெறுபேற்றை வேண்டினர்.

அவர்களின் அந்த வேண்டுகை நியாயமானது என்பதை இப்போது உணர முடிகின்றது.

இதில் வி.கல்யாண சுந்தரனாரின் பாடல்கள் வித்தியாசமானவை. ஓர் இடத்தில் அவர் “தா, தா, தா, தா, தா, தா, தாக் குறைக்கு என் செய்வேன்” எனப் பாடுகின்றார்.

தா... தா... என்பதில் என்ன பொருள் உண்டு என்று நினைக்கத் தோன்றும்.

தா என்பதில் தருதல் என்ற சொல்லின் முன்னடைப் பொருளைத் தவிர வேறில்லை எனலாம்.

அப்படியானால் “தா... தா... தாக் குறைக்கு என் செய்வேன்” என்று வி.கல்யாண சுந்தரனார் ஏன் பாடினார் என ஆராய்ந்தேன்.

தா... தா... என்பதை ஏழு தடவைகள் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, ஏழு “தா” வைச் சேர்த்தால் எழுதா என்று பொருள் அறிய முடியும். ஆக, எழுதாக் குறைக்கு என் செய்வேன் என்பதே அந்தப் பாடலின் பொருளாகும்.

அட, இந்தப் பாடல்கள் எதற்கானவை. பட்டினத்தார், வி.கல்யாண சுந்தரனார் இவர்களின் பாடல்கள் பற்றிப் பேசுமளவுக்கு என்ன நடந்தாயிற்று என்ற கேள்வி உங்கள் பலரிடம் எழுந்திருக்கும்.

இந்தக் கேள்விக்கான பதில் நேற்றைய தினம் ஊடகங்களில் வந்திருந்த செய்திகள் தாம் எனலாம்.

ஆம், நம் மண்ணில் என்னதான் நடக்கிறது என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. எது சரி; எது பிழை என்பதைக்கூட மக்கள் அறிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஊடகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகச் செய்தி தருகின்றன. இதில் தூய செய்தி எது? உண்மைச் செய்தி எது? எந்தச் செய்தியை நம்புவது? எதை நம்பாமல் விடுவது? என்ற குழப்பம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் சரியான அறிக்கையிடல் மக்களைச் சென்றடைய வேண்டும்.

எங்கள் மக்கள் மிகப்பெரும் துன்பங்களை அனுபவித்தவர்கள். அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள்.

எனவே உண்மையை உண்மையாக அறிக்கைப்படுத்துங்கள். எழுத்து மூலமான அறிக்கைகள் மக்கள் உண்மையை அறிவதற்கு உதவக்கூடியவை.

அரசியலின் ஒவ்வொரு அசைவுகளையும் தமிழ் மக்கள் அறிய வேண்டும். அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு முதல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் உள்ளிட்ட அத்தனை தகவல்களும் எங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

உண்மைத் தகவல்கள் எம்மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்போதுதான் அவர்கள் தீர்ப்பு வழங்குவது சுலபமானதாக இருக்கும்.

ஆகையால் யாராக இருந்தாலும் குழப்பமான தகவல்களைத் தவிர்த்து, மக்களுக்கு உண்மையான செய்திகளைச் சொல்லுங்கள். அவர்கள் வழங்கும் தீர்ப்பை இறை தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

# யாழ். மாவட்டத்தில் தொடர் மழை; 9 ஆயிரத்து 871 பேர் பாதிப்பு

பெய்து வரும் தொடர் மழை காரணமாக யாழ் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 719 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 871 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த ஒரு வாரமாக பெய்த அடை மழை காரணமாக வடக்கில் யாழ். மாவட்டத்திலும் வெள்ளத்தால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 106 குடும்பங்களை சேர்ந்த 385 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 165 குடும்பங்களை சேர்ந்த 576 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 151 குடும்பங்களை சேர்ந்த 568 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட 214 குடும்பங்களை சேர்ந்த 844 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 393 குடும்பங்களை சேர்ந்த 1253 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 364 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 354 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 40 குடும்பங்களைச் சேர்ந்த 137 பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 308 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 107 பேரும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 49 குடும்பங்களை சேர்ந்த 183 பேரும் காரைநகர பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 643 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 352 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 273 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 66 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மின்னல் காரணமாக உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரு வீடுகளும் பருத்தித்துறை, கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தலா ஒரு வீடும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 41 வீடுகளும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 13 வீடுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 23 வீடுகளும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 4 வீடுகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில 78 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 22 வீடுகளும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 8 வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 7 வீடுகளும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளது என மேற்குறித்த புள்ளிவிபரத்தில் நேற்று பதிவிடப்பட்டுள்ளது.

குடாநாடு முழுவதும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 456 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 724 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடைய வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் மற்றும் உதவிகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்பட்டு வருகிறது. (இ-9)

## வேறு கட்சிக்காகப் பிரசாரம் செய்வோர் சுதந்திரக்கட்சியிலிருந்து நீக்கப்படுவர்

### மகிந்த அமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)


வேறு கட்சிக்காக பிரசாரத்தில் ஈடுபடுவோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர எச்சரித்தார்.

கட்சியை ஐக்கியப்படுத்தும் நோக்கில் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்பில் நெகிழ்வுப் போக்கான கொள்கைகள் முன்னதாக பின்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் கட்சி கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

வேறு அரசியல் கட்சிகளுக்காக பிரசாரத்தில் ஈடுபட்டு அவற்றை ஆதரிக்கும் உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க முடியாது என அவர் தெரிவித்தார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்பிணிகள் படுத்து உருளக்கூடாதா, ஏன்?**

கர்ப்பிணிப் பெண்கள் ஒருபுறமாகப் படுத்திருந்து விட்டு மறுபுறம் திரும்பிப் படுக்க நினைத்தால் எழுந்து உட்கார்ந்து திரும்பிப் படுக்கவேண்டும். அப்படியல்லாமல் படுத்தவாறே திரும்பிப் படுக்கக்கூடாது.

அவ்வாறு செய் தால் வயிற்றில் உள்ள குழந்தைக்கு கொடி சுற்றிக் கொள் ளும் வாய்ப்புள்ளது. கொடி சுற்றினால் குழந்தையின் நிலைமை மோசமாகும். சில வேளைகளில் பிரசவம் கஷ்ட மாகப் போய்விடும். மேலும் வயிற்றைக் கிழித்துக் குழந்தையை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

கர்ப்பகாலத்தில் புராணங்களைப் படிப்பது, கேட்பது, நல்ல நீதிக்கதைகளைக் கேட்பது, இறைவனை வழிபடுவது போன்றவற்றைச் செய்யவேண்டும். ஏன்?(தொடரும்)

## படகு கவிழ்ந்து விபத்து; 21பேர் நீரில் மூழ்கிப்பலி

(குண்டூர்)

ஆந்திராவில் சுற்றுலா சென்ற படகு கிருஷ்ணா நதியில் கவிழ்ந்து விழுந்த விபத்தில் பலி எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணா நதியில் புனித நீராட ஓங்கோலிலிருந்து நடை. பயிற்சி கழகத்தைச் சேர்ந்த 38 பேர் வருகை தந்தனர்.

கார்த்திகைத்தின புனித நீராடலை முடித்த பிறகு அவர்கள் ஆந்திர மாநில சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் பெரிய படகில் ஏறி பவானி தீவுக்கு சென்றனர்.

அந்த தீவைச் சுற்றிப் பார்த்து விட்டு பிறகு அவர்கள் 38 பேரும் படகில் ஏறி பவித்ர சங்கமத்துக்கு சென்றனர். அப்போது ஆற்றின்நடுவே அந்த படகு திடீரென கவிழ்ந்தது.

இதில் 38 பேரும் தண்ணீருக்குள் விழுந்து மூழ்கினர். அவர்களில் 15 பேர் மட்டுமே உயிர் காக்கும் அங்கி அணிந்திருந்தனர். இருப்பினும் அவர்களும் தண்ணீரின் வேகத்தில் மூழ்கினார்கள்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 12 படகுகளில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த 17 பேரை அவர்கள் காப்பாற்றினர்.

மற்றவர்கள் உயிரிழந்து மிதந்தனர். நேற்று முன்தினம் வரை 16 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. நேற்றுக்காலை மேலும் 5 பேரின் உடல்கள் மீட்கப் பட்டன.


இதனால் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம மாலை வானம்இருட்டாகி மழை பெய்யும் சூழ்நிலை உருவானதும் படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

ஆனால் சுற்றுலா குழுவினர் வேறொரு படகில் ஏறி சென்றபோது விபத்தில் சிக்கி விட்டனர் என்று தெரிய வந்துள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பொறாமையும், ஒன்றுகூடி உழைக்க இயலாமையும் அடிமைகளின் இயல்புகள். அவற்றை உதறியெறிய வேண்டும்.
- பரபரப்பு தேவையில்லை, சுறுசுறுப்பு எப்போதும் உன்னிடம் இருக்கட்டும். தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை.
- இறைவன் வரம்பு கடந்த பெருமைகளை உடையவன், தூய்மையான மனத்தைப் பெறுவதுடன் இறைவன் மீது நம்பிக்கையும் கொள்ள வேண்டும். அவனையே எப்போதும் சார்ந்து, நன்னெறியில் நின்றால் எதனாலும் உன்னை வெல்ல முடியாது.
- கொடுப்பதற்காக கையை இறைவன் படைத்தள்ளான். பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடம் உள்ள கடைசிப் பருக்கையையும் பிறருக்கு வழங்க வேண்டும். அவ்வாறு பிறருக்கு வழங்குவதால், நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் மாற முடியும்.
- தெளிந்த உண்மையும், கருத்துத் தூய்மையும் வெற்றியளிப்பது உறுதி. இவ்விரண்டையும் படைக்கலனாகக் கொள்ளும் எவரும் எத்தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவதும் உறுதி.

# உலக ஆண்கள் டென்னிஸ் போட்டி
# தொடக்க ஆட்டத்தில் பெடரர் வெற்றி



உலக ஆண்கள் டென்னிஸ் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்றார்.

ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும், தரவரிசையில் டாப்-8 இடங்கள் வகிக்கும் வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் 'ஏ.டி.பி. டூர் இறுதி சுற்று' என்று அழைக்கப்படும் உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

வருகிற 19 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த போட்டிக்கு நடப்பு சாம்பியனான இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே மற்றும் 5 முறை சாம்பியனான நோவக் ஜோகோவிச் (செர்பியா) ஆகியோர் காயத்தால் அவதிப்பட்டு வருவதால் தகுதி பெற முடியவில்லை. சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா தகுதி பெற்ற போதிலும் காயத்தால் விலகினார்.

இந்த போட்டியில் பங்கேற்றுள்ள 8 வீரர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி 'போரிஸ் பெக்கர்' அணி பிரிவில் 2-ம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜெர்மனி), மரின் சிலிச் (குரோஷியா), ஜாக் சோக் (அமெரிக்கா) ஆகியோரும், 'பீட் சாம்ப்ராஸ்' அணி பிரிவில் 'நம்பர் ஒன்' வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), டொமினிக் திம் (ஆஸ்திரியா), கிரிகோர் டிமிட்ரோவ் (பல்கேரியா), டேவிட் கோபின் (பெல்ஜியம்) ஆகியோரும் இடம்பெற்று இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீரர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரைஇறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

தொடக்க நாளான நேற்று முன்தினம் நடந்த முதல் ஆட்டத்தில் உலக தர வரிசையில் 2-வது இடத்தில் இருக்கும் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), 9-ம் நிலை வீரர் ஜாக் சோக்கை (அமெரிக்கா) எதிர் கொண்டார்.

1 மணி நேரம் 31 நிமிடம் நீடித்த விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரோஜர் பெடரர் 6-4, 7-6 (7-4) என்ற நேர் செட்டில் ஜாக் சோக்கை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தார். (கு)

SPORTS வலம்புரி விளையாட்டுச் செய்திகள்

## ஏ.டி.பி சேலஞ்சர் டென்னிஸ் தொடர்
## பயஸ் -பூரவ் ராஜா ஜோடி சம்பியன்




அமெரிக்காவில் நடைபெற்று வரும் நாக்ஸ்வில் ஏ.டி.பி. சேலஞ்சர் டென்னிஸ் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை லியாண்டர் பயஸ் - பூரவ் ராஜா ஜோடி தட்டிச் சென்றது.

ஏ.டி.பி. சேலஞ்சர் டென்னிஸ் தொடர் போட்டிகள் அமெரிக்காவில் உள்ள நாக்ஸ்வில் நகரில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் முதல் நிலை ஜோடியான இந்தியாவின் லியாண்டர் பயஸ் - பூரவ் ராஜா ஜோடி, இரண்டாம் நிலை ஜோடியான அமெரிக்காவின் ஜேம்ஸ் செர்ரேடானி - ஆஸ்திரேலியாவின் ஜான்-பாட்ரிக் ஸ்மித் ஜோடியை எதிர் கொண்டது.

இப்போட்டியின் முதல் செட்டை 7-6 என இந்திய ஜோடி கைப்பற்றியது.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய இந்திய ஜோடி இரண்டாவது செட்டையும் 7-6 என கைப்பற்றியது.

இதன்மூலம் 7-6, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற லியாண்டர் பயஸ் - பூரவ் ராஜா ஜோடி சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டென்னிஸ் குட்லா - கனடாவின் பிலிப் பெலிவோவை எதிர்கொண்டார். இப்போட்டியில், பெலிவோ 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.(கு)

## முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் போட்டியில் பங்குபெற முடியவில்லை

### சானியா மிர்சா தெரிவிப்பு



இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா முழங்கால் காயத்தால் அவதிப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை இந்த ஆண்டு தொடக்கத்தில் உலக இரட்டையர் தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தில் இருந்தார்.

காயம் காரணமாக சில போட்டிகளில் விளையாடாததால் அவர் தர வரிசையில் சமீபத்தில் 12-வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இந்த நிலையில் மும்பையில் நடந்த விளையாட்டு விருது விழாவில் கலந்து கொண்ட சானியா மிர்சா அளித்த பேட்டியில், 'இந்த வருடம் எனக்கு கடினமானதாக அமைந்தது. முழங்கால் காயத்தால் அவதிப்பட்டு வருகிறேன்.

இதனால் ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காயத்துக்கு ஆபரேஷன் செய்ய வேண்டுமா?, வேண்டாமா? என்பது சில நாட்களில் தெரியும்.

தர வரிசையில் டாப்-10 அருகில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்தார். (கு)

## இந்தியாவுக்கு எதிரான தொடரில் ஏஞ்சலோ மத்யூஸ் பந்து வீசமாட்டார்



இலங்கை அணியின் ஆல்ரவுண்டர் மத்யூஸ் இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் பந்து வீசமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி வீரர் ஏஞ்சலோ மத்யூஸ் கடந்த 12 மாதங்களுக்கு மேலாகவே தொடர் காயங்களால் அவதிப்பட்டு வருவதால் பல முக்கிய போட்டிகளில் விளையாடாமல் இருந்தார்.

இந்நிலையில், விரைவில் தொடங்கவுள்ள இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மத்யூஸ் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த போட்டிகளில் மத்யூஸ் பந்து வீச மாட்டார் என இலங்கை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் ருமேஷ் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் மத்யூஸ் துடுப்பாட்ட வீரராக மட்டும் களமிறங்குவார். பந்து வீச்சாளராக அணிக்கு செயற்பட மாட்டார்.

சில காரணமாகவே அவர் டெஸ்ட் போட்டிகளில் பந்து வீசவில்லை.

கடந்த ஜூலை - செப்டம்பரில் இலங்கையில் நடைபெற்ற இந்தியாவுடனான் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பந்து வீசிய மத்யூஸ், டெஸ்ட் தொடரில் பந்துவீசவில்லை என்பதை ருமேஷ் நினைவுகூர்ந்துள்ளார்.

கடந்த இரு தினங்களாக நடைபெற்ற போர் பிரசிடெண்ட் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் மத்யூஸ் பந்து வீச்சாளராக ஒரு பந்தை கூட வீசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



## இந்திய பந்து வீச்சாளர் புவனேஷ்குமாருக்கு டும் டும் டும்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்குமார். இவரது திருமணம் வருகிற 23 ஆம் திகதி மீரட்டில் நடக்கிறது. தனது நீண்டகால தோழியான நுபூர்நகரை மணக்கிறார்.

இதில் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்கிறார்கள். நவம்பர்30 ஆம் திகதி டெல்லியில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடக்கிறது. இதில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் பங்கேற்கிறார்கள். (பி)

## நல்லாட்சியில்...

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற அரச கணக்குகள் பற்றிய நாடாளுமன்றக் குழுவின் மதிப்பீட்டு செயற்திட்டத்தின் பெறுபேறுகளுக்கமைய நடைபெற்ற தேசிய விருது விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் வினைத்திறனான, பலமான அரசசேவை நாட்டில் காணப்பட்டதுடன், பிற்காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்தம் மற்றும் அரசியல் தலையீடுகளின் காரணமாக அரச சேவை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எமது அரசாங்கத்தின் கீழ் சுயாதீனமாக, பக்கச்சார்பற்று செயற்பட அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டதுடன், இந்த விருது வழங்கலின் ஊடாக அது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதனை ஏற்பாடு செய்த சகலருக்கும் தனது நன்றியையும் தெரிவித்தார்.

அரச சேவையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து திறனுள்ள அரச சேவையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதி. இத்தகைய விருது விழாக்கள் அரச சேவையை பலப்படுத்துவதில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றன என்றும் தெரிவித்தார். (ம)

## தமிழ் அரசியல்...

கழக சமூகத்தால் அண்மைக்காலமாக தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முக்கியமாக அநுராதபுரம் சிறையில் உள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை தமிழ் நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு கோரி ஒரு மாத காலத்துக்கு மேலாக போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இவ் விடயம் தொடர்பில், அதிகாரத்தில் உள்ள பலராலும் பல வாக்குறுதிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அவை பொய்த்துப்போன நிலையில் மாணவர்கள் ஜனநாயக ரீதியில் இவ் விடயத்தை சர்வதேச மட்டத்தில் எடுத்துச்செல்லும் முயற்சியிலும் அரசுக்கு தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்தும் குறித்த அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் வரையில் தமது போராட்டங்களை எடுத்துச்செல்ல தீர்மானித்துள்ளனர்

அந்த வகையில் இன்று இந்த மாபெரும் கவனயீர்ப்பு பேரணி யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. பேரணியாக சென்று நாவலர் வீதியில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கவுள்ளனர்.

இந்த பேரணிக்கு வடக்கில் உள்ள பொது அமைப்புக்கள் அனைவரும் தமது பூரண ஆதரவினை வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இதில் அனைத்து மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அனைவரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு யாழ்.பல்கலைமாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

## பியர் குடித்துக்....

படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும் என்றே மக்கள் கோரினார்கள். ஆனால் அரசாங்கம் என்ன கொடுத்துள்ளது.

பியர் ஒன்றை குடித்துக்கொண்டு சிறிய காரை ஓட்டிச்செல்லுங்கள் என்றே கூறப்பட்டுள்ளது.

சிறிய கார்களின் விலைகளை குறைத்தது மட்டுமல்லாமல், பியர்களின் விலைகளையும் குறைத்துள்ளது இந்த அரசு.

ஆகவே இந்தஅரசாங்கம் மக்களுக்கு எதிரான ஒரு வரவுசெலவுத்திட்டத்தையே முன்வைத்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## நாடாளுமன்றம்...

தலைமையில் தனியான குழு அமைக்கப்பட்டுள்ளது.

மனோ தித்தவெல்ல என்பவர் யார்? அரச அதிகாரியா, அரச ஊழியரா? இவை எப்படி நடக்க முடியும் என்பது குறித்து நாடு கவனம் செலுத்த வேண்டும்.

தனியார் துறையை சேர்ந்த மனோ தித்தவெல்ல வரவு செலவுத் திட்டத்தை பின்னறிவிப்பு செய்யும் குழுவின் தலைவராக இருக்கின்றார்.

மனோ தித்தவெல்ல யார்? நிதியமைச்சின் நிரந்தர செயலாளரா, வெளிநாட்டவர்களை நியமிக்கின்றனர். அவர்கள் கொள்ளையடிக்கின்றனர். பின்னர் தப்பிச் செல்கின்றனர் என பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தயா கமகே,

சபாநாயகர் அவர்களே! இது முற்றாக சபையை தவறாக வழிநடத்தும் பேச்சு. வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை நாங்கள் கடந்த அரசாங்கத்தை போல் வீண் விரயம் செய்ய மாட்டோம்.

கடந்த அரசாங்கத்தில் வரவு செலவுத்திட்டத்திற்கு 400 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் கடந்த அரசாங்கம் 325 பில்லியன் ரூபாயை மாத்திரமே செலவு செய்தது.

கடந்த அரசாங்கம் 350 பில்லியனை செலவு செய்த போதிலும் நாங்கள் வரவு செலவுத்திட்டத்தில் 780 பில்லியனை ஒதுக்கியுள்ளோம்.

உண்மையில் அரச கட்டமைப்பின் கொள்ளளவை நாம் அதிகரிக்க வேண்டும் இல்லையென்றால் ஒதுக்கப்பட்ட நிதியை செலவிட முடியாது போகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் கூறுவதிலும் உண்மை உள்ளது. அரச கட்டமைப்பை எம்மால் வலுப்படுத்த முடியாதுபோனால் எம்மால் இதனை செலவு செய்ய முடியாது.

இதனால் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்த நிதியமைச்சரை திட்டி பயனில்லை என தயா கமகே தெரிவித்தார்.

இதன் போது நிலையியல் கட்டளை சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கேள்வி ஒன்றை முன் வைக்க முயற்சித்தார்.

நாடாளுமன்றத்தில் இப்படி பணியாற்ற முடியாது என்று நாங்கள் பொது நலவாய நாடுகள் அமைப்பின் செயலாளரிடமும் முறைப்பாடு செய்தோம்.

நாடாளுமன்றத்தை தவறாக வழி நடத்துவது குறித்து நீங்கள் ( சபாநாயகர்) விசாரணை நடத்தினீர்கள்.

கூட்டு எதிர்க்கட்சியினரான நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்து, சபாநாயகரிடம் முறைப்பாடும் செய்தோம். அப்படி இருக்கும் போது நாடாளுமன்றத்தை தவறாக வழி நடத்துவதாக அமைச்சர் கூறுகிறார்.

தற்போது இந்த இடத்தில் இருந்து சர்வதேசநாடாளுமன்ற சங்கத்திடம் முறைப்பாடு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா,

இப்படி பேச முடியுமா? அதற்கு இருக்கும் உரிமை என்ன? நீங்கள் முதலில் நாடாளுமன்றத்திற்கு வந்தவர் என்றால், நீங்கள் செய்யும் வேலை என்ன?.

செய்யும் வேலை சரியானதா?. இது என்ன நிலையியல் கட்டளை?இந்த பண்டிததனத்தை மாற்றிக்கொள்ளுங்கள். கேள்வியை கேட்டீர்கள். பதிலளிக்கப்பட்டது உட்காருங்கள்.

நீங்கள் செய்வதில் என்ன அர்த்தம். சபாநாயகர் அவர்களே! இவர் முக்கியமானவரா? இவர் புதுமையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவரா?.

தவறாக வழிநடத்தப்பட்டதோ இல்லையோ, கேள்வி கேட்க முறையொன்று உள்ளது. அதற்கு அமைய வேலை செய்யுங்கள் என்றார். (ம)

## சிறுவன் பலி...

என்ற சிறுவனே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் கடந்த 9 ஆம் திகதி இரவு 6.30 மணியளவில் யாழ் ஒஸ்மானியா கல்லூரிக்கு முன் உள்ள கடையில் பொருட்கள் வாங்கிவிட்டு வீடு நோக்கி சென்றுள்ளான்.

அப்போது பொம்மைவெளிப்பகுதியில் இருந்து அதிவேகமாக மோட்டார்சைக்கிளில் இளைஞன் ஒருவர் வந்துள்ளார். அப்போது வீதியில் இருந்த பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் சென்றதில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் சென்ற சிறுவனுடன் மோதுண்டு 15 மீற்றருக்கு சிறுவன் மோட்டார் சைக்கிளுடன் சேர்த்து இழுத்து செல்லப்பட்டுள்ளான்.

இதில் படுகாயம் அடைந்த சிறுவன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு உடனடியாக அனுப்பப்பட்டிருந்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று பகல் உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். மேலும் இந்த விபத்தை ஏற்படுத்திய இளைஞன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-9,30)

## தமிழர் மீதான...

வெளிநாடுகளில் அடைக்கலம் தேடியுள்ள தமிழர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல் மற்றும், மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் ஏபி வெளியிட்ட ஆய்வு அறிக்கை அனைத்துலக மட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலங்களில் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினராலும், படையினராலும், சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள வடுக்களையும், ஏபி படங்களாக வெளியிட்டுள்ளது. (ம)


## கேள்வி அறிவித்தல்

### கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டம் -2017

1.இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசினது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் விசேடநிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டத்தின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டத்துக்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது .

2.செயலாளர், பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4.கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாணித்த அனுபவத்தை கொண்டவராக இருத்தல்வேண்டும்.

5.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி 0212285761, E-Mail: kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 2017.11.28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து. 2017.11.14ஆம் திகதியிலிருந்து 2017.11.28 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,500/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை சபையால் விநியோகிக்கப்பட்ட மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து இரண்டு கடித உறையில் இட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு செயலாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2017.11.28ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9.கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 32 நாட்கள் (முப்பத்தி இரண்டு நாட்கள்- (2017/12/15) வரையும் செல்லுபடியாகும்.

10.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(2)/Solar/2017 | சூரிய மின்கல வீதிவிளக்குகள் கொள்வனவுசெய்து பொருத்துதல் | 01 Mn | 1 மாதங்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 10,000 | 2018/02/28 |

11.கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2017.11.21 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

கணேசன் கம்சநாதன்
செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி,
2017. 11. 13

(சி-372)

# ஈரான் - ஈராக் நில நடுக்கம்...

ஈரான்-ஈராக் எல்லையின் வடக்கு பகுதியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 400 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். மேலும், ஆயிரக் கணக்கானோர் காயமடைந்துள்ளார்கள். அளவுகோலில் 7.3-ஆக பதிவாகி உள்ளது. ஈரானை சேர்ந்த உதவி நிறுவனம் ஒன்று, 70,000 மக்களுக்கு தங்குமிடம்தேவைப் படுவதாக கூறியுள்ளது.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஈரான் மேற்கு மாகாணமான கெர்மான்ஷா பகுதியை சேர்ந்தவர்கள். அந்தப் பகுதியில் மட்டும் 5,660 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஈராக் தலைநகரம் பாக்தாத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டதும் மக்கள் வீதிக்கு ஓடிவந்தனர். இந்த நிலநடுக்கத்தால் ஈராக்கில் இறந்தவர்கள் ஏழு பேர்.

இந்தப் பகுதியில் உள்ள பள்ளிவாசல்கள் தொடர்ந்து பிரார்த்தனைகளை ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பி வருகிறது. ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய பாக்தாத்தில் வசிக்கும், மூன்று குழந்தை களுக்கு அம்மாவான மஜிதா அமீர், நான் என் குழந்தைகளுடன் அமர்ந்து இரவு உணவை சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். அந்தச் சமயத்தில், எங்களுடைய கட்டடம் காற்றில் ஆடத் தொடங்கியது என்கிறார்.

மேலும் நான் முதலில் சக்திவாய்ந்த வெடிகுண்டு காரணமாக கட்டடம் ஆடுகிறது என்று நினைத்தேன். ஆனால், சிறிது நேரத்தில் அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள் நிலநடுக்கம் என்று கத்துவதை கேட்டேன். என்று அப்போது நடந்த காட்சிகளை விளக்குகிறார் அவர்.

அவசரகால அதிகாரி ஒருவர், ஈரானில் மட்டும் 3,950 பேர் காயமடைந்திருக்கிறார்கள் என்று தெரிவித்ததாக இர்னா செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் எல்லையிலிருந்து 15 கி.மீ தொலைவில் இருக்கும் சர்பொல் ஏ ஜகாப் நகரத்தில் தான் பலர் இந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு இருப்பதாக, இரான் அவசரகால சேவையகத்தின் அதிகாரி பிர் ஹுசைன் கோலிவண்ட் கூறியதாக ஈரானிய அரசு தொலைக்காட்சி நிறுவனமான இரின்னில் செய்தி வெளியிட்டுள்ளது.

நகரத்தின் முக்கிய மருத்துவமனை, இந்த நிலநடுக்கத்தால் மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால், காயமடைந்த பல நூறு பேருக்கு அங்கு சிகிச்சை அளிக்க அந்த மருத்துவமனை சிரமப்படுவதாக, ஈரான் அரசு தொலைக்காட்சி கூறுகிறது.

இந்த நிலநடுக்கம் ஒரு நிமிடத்திற்கு மேல் நீடித்ததாக, இர்பில்லில் வசிக்கும் பிபிசியின் செய்தியாளர் ரமி ருஹாயெம் கூறுகிறார்.

முதல் சில நொடிகளுக்கு எங்களால் இது என்ன என்று உணரமுடியவில்லை. இது மிதமான நிலநடுக்கம்தானா அல்லது கனவா...? என்ற குழப்பத்தில் இருந்தேன். ஆனால், சிறிது நேரத்தில் கட்டடம் கொஞ்சம் கொஞ்சமாக ஆடத் தொடங்கியது. என்கிறார். துருக்கி, இஸ்ரேல், குவைத் ஆகிய நாடுகளிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டு இருக்கிறது. (ம)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)


## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(1316) M.Suren

மாதம் 50,000 - 200,000/- வருமானம்தரும் வெளிநாட்டு வேலை & விசா ஏற்பாட்டுடன்

Swiss - UK - Canada - Australia - New Zealand Dubai - Qatar - Kuwait - KSA - Oman - Bahrain

Diploma in Tourism & Hotel Management 10ம் அணி

Fast Track (1 - 3 month)

Entry Level (3 - 6 months)

Diploma (6 - 12 months)

கற்கைநெறியை நிறைவுசெய்து வெளிநாடு செல்லும் வரையில் யாழ் - கொழும்பு முன்னணி ஹோட்டேல்களில் வேலைவாய்ப்பு

(C-377)

FREE ENGLISH, SINHALA & IT

SIKARAM ACADEMY Business · Hospitality · Media FAST TRACK to CAREERS

அனுமதிகளுக்கு: 077 36 16 798 021 222 00 11 www.sikaram.lk

175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்

## Vacancy For IT Solutions

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் கணினி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற கூடிய ஆண் தேவை.

சம்பளம் தகமை அடிப்படையில் வழங்கப்படும்.

Computer Hardware துறையில் முன்அனுபவம் இருத்தல் வேண்டும்

Please send your CV to hr@beetatec.lk

தொடர்பு: 0770785847

(1324)

## பிரத்தியேக வகுப்பு S.KIRUBAKARAN (B.COM)

கணக்கீடு - A/L

வணிகக் கல்வியும் கணக்கீடும் - 10, 11

Note. 1 :- வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்

Note. 2 :- கடந்த கால வினா மாதிரி வினா உட்பட கற்பிக்கப்படும்

Note.3 :- மாணவர்களின்தேவைக்கேற்ப நேரம் ஒழுங்குபடுத்தித்தரப்படும்

(1318)

T.P : 0779760560

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card)முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

(C-371)

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MITSUBIHI LANCER 13 - XXXX உடன் விற்பனைக்கு உண்டு.

(C-373)

T.P : 0777787545

## விற்பனைக்கு

உணவகங்களில் உணவு பார்சல் செய்யக் கூடிய மற்றும் மாணவர்கள் பயிற்சி செய்து பழகக்கூடிய கட்டிங் சீட் விற்பனைக்குண்டு.

வலம்புரி

இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 567 1532

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-364)



UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

McDonald's

அமெரிக்க நிறுவன சவூதி கிளைக்கு சிகரம் மூலம் விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினர் மாதம் 50,000/- உடன் வேலைவாய்ப்பு பெற்றனர் (விபரங்களை எமது அலுவலகத்தில் நேரில் பார்வையிடலாம்)

DUBAI

ஹொட்டேல் சுத்திகரிப்பாளர் சம்பளம் 40,000/-

இலவச உணவு, தங்குமிடம் + Tips + OT (வயதெல்லை 19 - 35)

Qatar டக்சி ஓட்டுநர், Kuwait சமையலாளர், A/C Technician, Dubai அச்சக வேலையாள் (பெண்கள்). Mechanical Technician வெற்றிடங்களும் உண்டு

(C-377)

மேலதிக விபரங்களுக்கு 0777 324 004

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222 www.tgl.lk

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.

T.P : 077 328 2051

(1326)

## வீடு விற்பனைக்கு

நவாலி கலையரசி வீதியில் 786 (பஸ்றூட்) பிரதான வீதியிலிருந்து 300m தூரத்தில் இரண்டு பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளும்கொண்ட புதியவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 795 0165

(C-374)

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஒரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.

0768226243

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

நான் A/L எடுத்துக்கொண்டிருக்கும்போதே பதிவு செய்துவிட்டேன் பெறுபேறுகள் வரவும் விசா வரவும் சரியாக இருந்தது.இப்போது அமெரிக்காவில் எனது வாழ்க்கை நான் எதிர்பார்த்த விதத்தில் அமையக்கூடியதாக இருந்தது.V2 TRAVELS க்கு நன்றிகள்.

(C-364)

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



யோகேஸ்வரன் - சுவிந்திரன் அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | | 10,பேருந்து நிலையம் | முடக்காடு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

2000/= விசேட கழிவு SPECIAL OFFERS

இந்தியா செல்லும் பயணிகளுக்கு நற்செய்தி

365 நாட்களும் உங்கள் இதயங்களை இணைக்கும் எங்கள் இணையம்

www.nationtravels.com

யாழ் நகரில் 24 மணித்தியால சேவை வழங்குனர்.

Nation popular travels & tours

VISA MasterCard DISCOVER

Hotline : 0715 365 365 Hotline : 0214 920 920

(C-378)


# இனப்பிரச்சினை...

மன்ற சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நேற்று மூன்றாவது நாளாகவும் பாராளுமன்றத்தில் நடைபெறுகிறது. அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல தசாப்தங்களாக வீழ்ச்சியடைந்திருந்த அரச வருமானம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அதிகரிக்க முடிந்துள்ளது.

சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் மேலதிக நிதியைக் கொண்டிருந்த நாடு இன்று 700 கோடி ரூபாய் கடன் சுமைக்கு ஆளாகியுள்ளது. இதற்கு ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கென ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகளை அபிவிருத்தி செய்ய 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், உயர் கல்விக்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் புதிதாக ஏழு பீடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார். (ம)

# போர்க்குற்றங்களில்...

நீங்கள் சிலவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே சில விடயங்கள் இருந்தன. அரசியல்வாதிகளுக்காக இராணுவத்தில் உள்ள சிலரால் அவை நடத்தப்பட்டன. இவை சட்ட விரோதமானவை, எமது மக்களின் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத் திற்கு எதிரானது.

அரசியல்வாதிகளுக்காக செயற்பட்ட சிறிய எண்ணிக்கையிலான அதிகாரிகள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்கள் அப்பாவிகள் என்றால், விடுவிக்கப்படுவார்கள். போர் வீரர்கள் வேட்டையாடப்பட்டு வருவதாக அரசியல் மேடைகளில் குற்றச்சாட்டுகளை கேட்கிறேன்.

அந்தக் குற்றச்சாட்டுகளை வன்மையாக மறுக்கிறேன். இராணுவம் தனது பெயரை தெளிவுபடுத்த வேண்டும். என்றும் அவர் தெரி வித்துள்ளார். (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.